27-4-1952 M.V.M BANGALORE ?


# போர்வாள்

வாள் 5 வீச்சு 30

26-4-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி மணிமொழியார்

மா. இளஞ்சேரியன் B.A. Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி கல்யாணசுந்தரம்

விலை அணா 2


# கப்பல் கவிழ்ந்தது!

[பாண்டியன்]

என்னைப் பார்ப்பதற்காக வென்று எப்போது வந்தாலும் சரி, நண்பன் சேரன், ஏதாவது ஒரு புது சேதியைக் கொண்டுவராமல் வருவதே கிடையாது. அந்த வழக்கத்திற்கு விரோதமில்லாமல் தான், சேரன், இன்றைய தினமும், "போர்வாள்" அலுவலகத்திற்குள் நுழைகிறபோதே, "ஒரு சேதி தெரியுமோ பாண்டியா! பண்டித நேரு மிதக்கவிட்ட கப்பல்களிலே ஒன்று கடலில் மூழ்கிப்போய் விட்டது" என்று கூறிக்கொண்டே வந்தான்.

"ஐயையோ! எனக்குத் தெரியாதே! என்றைக்கப்பா நடந்தது அந்தச் சோக சம்பவம்?"

"சென்ற வெள்ளிக்கிழமையன்று!"

"அப்படியா சங்கதி! அந்தக் கப்பலில் நமக்கு வேண்டியவர்கள் யாராவது பயணம் செய்துகொண்டிருந்தார்களோ? நம் நண்பர்கள், உறவினர்கள், உற்றார் — யாராவது......?"

"இல்லை, இல்லை பாண்டியா! நம் உற்றாரோ உறவினரோ யாருமில்லை அதில். தீர விசாரித்துவிட்டேன்."

"கப்பலின் பெயரென்ன, சேரா? ஜல உஷாவா, ஜல ஜவஹரா, ஜல பிரபாவா, என்ன அதன் பெயர்?"

"ஜல உஷாவுமல்ல, ஜல ஜவஹருமல்ல, ஜல பாடியாலா!"

"ஜல பாடியாலாவா! அப்படி ஒரு கப்பல் இருக்கிறதா என்ன? அந்தக் கப்பலை எப்போது மிதக்க விட்டார் நேரு?"

"போன மாதம் தான்!"

"அட பாவமே! போன மாதம் மிதக்கவிடப்பட்ட கப்பலா இந்த மாதம் மூழ்கிப் போய்விட்டது! ஆச்சரியமாய் இருக்கிறதே! ஒரே மாதத்திலா இந்த அநியாயம் நடந்துவிட்டது?"

"என்ன செய்யலாம் பாண்டியா? கப்பலை மிதக்கவிடுகிறபோதே பலர், பல சிறந்த அறிவாளிகள், கப்பல் துறையிலே தேர்ந்த அநுபவமும் முதிர்ந்த அறிவும் படைத்தவர்கள், பண்டித நேருவைப் பார்த்து எச்சரித்தார்கள் இந்தக் கப்பலை மிதக்கவிடாதீர்கள்—அது ஓடாது என்று! அவர் கேட்டால் தானே?"

"பலர் எச்சரிக்கை செய்துமா அவர் கேட்கவில்லை!"

"கேட்காதது மட்டுமா, எச்சரிக்கை செய்தவர்களை யெல்லாம் பொச்சரிப்புக்காரர்கள் என்றார்!"

"நல்லது சொன்னவர்களைப் பற்றிப் பொல்லாங்கா பேசினார்?"

"ஆமாமப்பா ஆமாம்! பொல்லாங்குதான் பேசினார்! பொச்சரிப்புக்காரர்கள் என்றுதான் தூற்றினார்! தேசத்துரோகிகள் என்றும், தேசத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் மூர்க்கர்கள் என்றும், பிறர் வாழும் பொறுக்காத பேதைகள் என்றும் தான் ஏசினார்!"

"பிறகு...?"

"பிறகென்ன? ஆடி அசைந்து, தட்டுத் தடுமாறி, ஒரே ஒரு மாதம் தான் ஓடிற்று கப்பல். இப்போதோ கடல் அன்னையின் வயிற்றுக்குள் சமர்ப்பணம் ஆகிவிட்டது."

"இப்போது என்ன சொல்லுகிறார் நேரு?"

"என்ன சொல்லுகிறார்! என்ன சொல்ல இருக்கிறது இப்போது? இரண்டு உதடுகளையும் இறுக மூடிக்கொண்டிருக்கிறார்! இப்படி ஒரு சம்பவமே நடக்காததுபோல, இந்த சம்பவத்தைப்பற்றியே தனக்குக் கவலை இல்லாதது போல, வேறு ஏதேதோ காரியங்களில் தன்னுடைய ஆழ்ந்த கவனத்தைச் செலுத்திவிட்டவர்போல நடித்துக் கொண்டிருக்கிறார்!"

"முன்னே எச்சரிக்கை செய்தார்களே அவர்களென்ன சொல்லுகிறார்கள் இப்போது?"

"அவர்களா? அப்போதே சொன்னோமே கேட்டாயா? படு! படு! என்று கூவுகிறார்கள்! கூவாமல் இருப்பார்களா? எவ்வளவு தூரம் எச்சரிக்கை செய்தார்கள்? எவ்வளவு இங்கிதமா விஷயங்களை எடுத்துச் சொன்னார்கள்? வேண்டாமய்யா நேருஜீ—இந்தக் கப்பல் ஓடாது—சீக்கிரம் கவிழ்ந்துவிடும்

—வின் பிரயத்தனம் எதற்காக— என்று எவ்வளவு மென்மையாகவும் தெளிவாகவும் இருக்கும் நிலைமையை விளக்கிக் காட்டினார்கள்? கேட்டாரா அந்த அலகாபாத் அற்புத சித்தர்? கேட்டிருந்தால் இந்த விபரீதம் நடந்திருக்குமா இப்போது?"

"மக்களெல்லாம் கைகொட்டிச் சிரிப்பார்களே! நேருவின் சாமர்த்தியம் இவ்வளவுதானா என்று கேலி பேசுவார்களே!"

"பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள்! மற்றவர்கள் எச்சரித்தபோது அவர்கள்மீதெல்லாம் அவர் சீறிவிழுந்த காட்சியையும், இப்போது, அவர்களெல்லாம் அன்றே எடுத்துக்காட்டியபடி கப்பல் மூழ்கிவிட்ட சம்பவத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, மக்கள், பண்டிதரே! பண்டிதரே! உம் திறமை இவ்வளவுதானா பண்டிதரே! என்று கேலிக்கீதம் பாடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்."

"அது இருக்கட்டும் சோமா! அந்தக் கப்பலின் பெயரென்னவென்று சொன்னாய்?"

"ஜல பாடியாலா!"

"ஓஹோ! ஜல பாடியாலாவா! அது சரி! அந்தக் கப்பல் எங்கே கட்டப்பட்டது? இந்தியாவிலா? வெளிநாடுகளிலா?

"இந்தியாவில்தான்! வெளிநாடுகளில் கட்டப்பட்டால் இவ்வளவு மோசமாகவா இருக்கும் ஒரு கப்பல்? இப்படியா ஒரு மாதத்திற்குள் கவிழ்ந்துவிடும்? சாட்சாத் பாரதபூமியில், ஆசிய ஜோதி பண்டித நேருவின் ஆலோசனைப்படியும் அறிவுரைப்படியும் கட்டப்பட்ட கப்பல்தான் அது! ஆனால் ஒரு விஷயம்! உன்னிடம் முதலிலேயே சொல்லியிருக்கவேண்டும்! மறந்துவிட்டேன்! ஜல பாடியாலா இருக்கிறதே, அது, மற்ற கப்பல்களைப்போல, இரும்பாலும் மரத்தாலும், கட்டையாலும் கழியாலும், பற்பல வகையான உலோகங்களாலும் கட்டப்பட்டதல்ல!"

"அப்படியென்றால்........? எந்தெந்த மூலப் பொருள்களைக் கொண்டு அந்தக் கப்பல் கட்டப்பட்டதென்று நீ கூறுகிறாய்?"

"பதவிவேட்டை — அதிகார மோகம்—சர்வாதிகாரப் பித்து—பாசிச வெறி-ஜனநாயக வெறுப்பு-மந்திரிப் பீடமோகம் ஆகிய இந்த மூலப் பொருள்களால் கட்டப்பட்டதுதான்! அந்தக் கப்பல்! பாடியாலா மந்திரி சபை என்பது, அந்தக் கப்பலுக்குள்ள இன்னொரு பெயர்."

"ஓஹோ! பாடியாலா மந்திரி சபை கவிழ்ந்துபோனதைப்பற்றித்தான் நீ இவ்வளவு நேரமும் சிலேடையாகப் பேசிக்கொண்டிருந்தாயோ? அப்படிச் சொல்லு விஷயத்தை! இப்போதுதானே சேதி இன்னதென்று எனக்குப் புரிகிறது." பாடியாலா என்பது வட இந்தியாவில் உள்ள ஒரு மாகாணம். பாடியாலா—கிழக்குப் பஞ்சாப் ஸ்டேட்ஸ் யூனியன் என்பது அதன் விரிவான பெயர், பெப்சு ராஜ்யம் என்பது, அந்த மாகாணத்திற்குள்ள மற்றொரு பெயர்.

அங்கே நடைபெற்றசட்டசபைத் தேர்தலில், காங்கிரஸ் கட்சி, படுதோல்வி அடைந்தது.

அந்த மாகாண சட்டசபைக்குரிய மொத்த எம். எல். ஏ. ஸ்தானங்கள் 60.

| | |
|---|---|
| காங்கிரஸ் | 25 |
| கம்யூனிஸ்ட் | 3 |
| சுயேச்சை | 9 |
| பிரஜா | 1 |
| ஜனசங்கம் | 2 |
| ஷெட் வகுப்பு | 1 |
| மற்ற கட்சிகள் | 19 |
| மொத்தம் | 60 |

மொத்தமுள்ள 60 ஸ்தானங்களில், மேலே குறிப்பிட்டுள்ளபுள்ளி விவரப்படி, 25 ஸ்தானங்களை மட்டும்தான் காங்கிரஸ் கைப்பற்றியிருந்தது பொதுத் தேர்தலில்.

மொத்த எம். எல். ஏ. ஸ்தானங்களில், எந்தக்கட்சி, பாதி அல்லது பாதிக்கு மேற்பட்ட எண்ணிக்கை உடைய ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறதோ, அந்தக் கட்சிக்குத்தான் மந்திரிசபை அமைக்கும் உரிமை உண்டு.

இது, ஜனநாயக தத்துவத்தின் பாலபாடம்.

காங்கிரஸ் தலைவர் பண்டித நேருவோ, தன்னைஒரு ஜனநாயகவாதி என்று சொல்லிக் கொள்வதிலே அடங்காத ஆசையும் அளவற்ற மோகமும் படைத்தவர்.

காங்கிரஸ் கட்சியோ, பாடியாலா ராஜ்யத்தில், பாதி எண்ணிக்கையைவிடக் குறைவான ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிற காரணத்தால், அந்த ராஜ்யத்தில் அது ஒரு மைனாரிட்டி கட்சியாக ஆகிவிட்டது.

ஜனநாயகத் தத்துவப்படி, ஒரு மைனாரிட்டி கட்சி, மந்திரிப் பீடத்தில் அமரக்கூடாது.

ஆகவே, தன்னை ஒரு ஜனநாயகவாதி என்று ஓயாமல் விளம்பரப்படுத்திக் கொள்ளும் பண்டித நேரு பாடியாலா ராஜ்யத்தில், காங்கிரஸ் கட்சியை. மந்திரிப் பீடம் ஏற அனுமதிக்கமாட்டார் என்றே எல்லோரும் எண்ணமிடலாயினர்.

பாடியாலா ராஜ்யத்தைச்சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள். எப்படியாவது மந்திரிப்பீடத்தில் அமர்ந்தேயாக வேண்டும் என்று துடிதுடித்தனர்.

"நாங்கள் மைனாரிட்டி கட்சிதான், ஆனாலும் கனம் மந்திரிகளாக நாட்டில் பவனிவரத்தான் போகிறோம் பாரீர்" என்று அந்த அசோக சக்ரதாரிகள் ஆரூடம் கூறினர்.

"பண்டித நேரு ஒப்புக்கொள்ள மாட்டாரா—பார்க்கலாமே அதையும் தான்"—என்று அவர்கள் மீசையை முறுக்கிக் காட்டினர்.

"60—25! எண்ணிக்கை குறைவுதான்! இருந்தாலுமென்ன? மந்திரி நாற்காலி எங்களை வேண்டாமென்று கூறிவிடும்?" என்று விசித்திரமான மொழியாலே விபரீதமான வாசகங்களை வீசினர்.

"என்ன இருந்தாலும் பண்டித நேரு ஜனநாயகக் கோட்பாட்டிலே ஆழ்ந்த நம்பிக்கை படைத்தவர் அவர், ஏனைய தேசியவாதிகளைப் போன்றவர் அல்லர். ஜனநாயகத்தை மறக்கும் மகோன்மத்தத்தனம் அவரிடம் இருக்காது. பாடியாலா பாரதபுத்திரர்கள் எவ்வளவுதான் துள்ளினாலும், அவர், அவர்களை, மந்திரிசபை அமைக்க அனுமதிதர மாட்டார். மைனாரிட்டி கட்சி மந்திரிசபை அமைப்பது ஜனநாயகக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தும், அந்தத் தவறான காரியம் புரிய, தன் கட்சித் தோழர்களுக்கு அவர், 'லைசென்ஸ்' அளிக்கமாட்டார்."

இப்படியெல்லாம் கூறினர் காங்கிரசல்லாதாரிலேயே சிலர்.

"உங்களுக்கென்ன பைத்தியமா? மந்திரிசபை அமைக்க எங்களுக்கு நிச்சயம் அனுமதி தருவார்

நேரு'' என்று அழுத்தந்திருத்தமாக அதற்குப் பதில் மொழி புகன்றனர் பாடியாலா காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள்.

இறுதியில் அவர்களுடைய அருடமே பலித்தது — ஏனையோரின் வாக்கு பொய்த்தது—பண்டித நேரு மந்திரிசபை அமைக்கச் சம்மதம் கொடுத்துவிட்டார் — ஜனநாயகத்திற்கு மாறான செயல்தான் அப்படிச் செய்வது—ஆனாலும் சரி என்று தலையை அசைத்துவிட்டார். பண்டித நேருவா, இப்படி, ஜனநாயகக் கோட்பாட்டிற்கு நேர் மாறாக நடக்கிறார் என்று மக்கள் ஆச்சரியத்தால் அசையாச் சிலைகளாக மாறினர் ஆம்! ஆம்! நான் தான் கூறுகிறேன்! மைனாரிட்டி காங்கிரசே! மந்திரிசபை அமைத்து விடு! என்று கூறிவிட்டார் பண்டித நேரு.

மொத்தம் 60 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் 25 உறுப்பினர்களை மட்டுமே தன் கட்சிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்த காங்கிரஸ் கட்சி, சுயேச்சை உறுப்பினர்களில் ஒரு ஐந்துபேரை,மந்திரிப் பதவி ஆசைகாட்டி தன்பக்கம் சேர்த்துக் கொண்டு மந்திரிசபை அமைத்துவிட்டது,

மந்திரிசபை அமைத்த பிறகு, ஒரு மாத காலம், சட்டசபையைக் கூட்டாமலேயே காலத்தை ஓட்டி வந்தது காங்கிரஸ் தலைமைப் பீடம்.

ஏப்ரல் 16-ம் நாளன்று சட்டசபை கூட்டப்பட்டது.

சட்டசபைத் தலைவர் தேர்தல், அன்று நடத்தப்பட்டது.

தலைவர் தேர்தலில், காங்கிரஸ், படுதோல்வி அடைந்தது.

காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாகத் தேர்தலுக்கு நிறுத்தப்பட்டவர் 27 வோட்டுகளைத்தான் பெற்றார்.

காங்கிரசல்லாத ஏனைய கட்சிகளின் பிரதிநிதியாக நிறுத்தப்பட்டவர் 33 வோட்டுகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

சட்டசபைத் தலைவர் தேர்தலில், காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது. காங்கிரசல்லாதார் வெற்றி பெற்றனர்.

காங்கிரஸ் ஆதரவாளர்கள்—27 பேர்தான் என்பதையும், காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள்—33 பேர் என்பதையும், சட்டசபைத் தலைவர் தேர்தல், முரசறைந்து தெரிவித்து விட்டது.

மந்திரிசபை அமைத்த நேரத்தில் 30 என்கிற எண்ணிக்கையை உடையதாக இருந்த காங்கிரஸ் பலம், தலைவர் தேர்தலின் போது, 27 என்கிற எண்ணிக்கைக்கு விழுந்துவிட்டது.

காங்கிரஸ், இப்போது மைனாரிட்டியாகிவிட்டது.

காங்கிரசல்லாதார் — 33 காங்கிரஸ்—27. எனவே காங்கிரஸ் கட்சி மந்திரிப் பீடத்தில், இனியும் வீற்றிருக்கக் கூடாது என்பது தெளிவாகிவிட்டது.

காங்கிரசல்லாதார் 33 பேர் போக, மிச்சமிருக்கும் 30 பேரும் ஒன்றாகச் சேர்த்து ஓர் ஐக்கிய முன்னணி அமைத்திருக்கின்றனர்.

அந்த ஐக்கிய முன்னணியின் பலம் முப்பதாகவும், காங்கிரஸ் கட்சியின் பலம் இருபத்தேழாகவும் இருக்கும் காரணத்தால், தலைவர் தேர்தலுக்குப் பிறகு, காங்கிரஸ் கட்சி, மந்திரிப் பீடத்தில் வீற்றிருக்க எந்தவித நியாயமும் கிடையாது.

எனவே, தலைவர் தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடனே, காங்கிரஸ் மந்திரிசபை, ராஜினாமா செய்துவிடும் என்றே எல்லோரும் எதிர் பார்த்தனர்.

ராஜினாமா செய்திருக்கவேண்டிய முறை.

ராஜினாமா செய்வதுதான், ஜனநாயக மார்க்கம்.

வேறு எந்தக் கட்சிக்காரர்களுக்கு அத்தகைய நிலைமை ஏற்பட்டிருந்தாலும் ராஜினாமா செய்யாமல் இருந்திருக்கமாட்டார்கள்.

ஆனால் தேசிய வாதிகள், பதவி ஆசை என்றால் இன்னது என்பதையே அறியாத தியாகத் திருமேனிகள் அல்லவா?

ஆகவே அவர்கள் மந்திரிப் பதவிகளில் அட்டைகள்போல் ஒட்டிக் கொண்டுவிட்டார்கள்.

ராஜினாமா செய்ய மறுத்துவிட்டார்கள்.

மைனாரிட்டி கட்சிக்காரர்கள் மந்திரிகளாகப் பவனிவருவதைப் பார்த்துக்கொண்டு பல்இளித்தபடியா இருப்பார்கள் மெஜாரிட்டி கட்சிக்காரர்கள்?

மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார்கள்.

சட்டசபை கூடிற்று.

நம்பிக்கையில்லாத தீர்மானத்தைப் பிரரேபிக்கும்படி, தீர்மானம்கொண்டுவந்தவரை அழைத்தார், சபைத்தலைவர்.

தீர்மானம் கொண்டுவந்தவரும் எழுந்து நின்றார் தீர்மானத்தைமுன்மொழிய.

தீர்மானத்தை பின் மொழிய வேண்டியவரும் தயாராக இருந்தார் தன் கடமையைச் செய்ய.

முன் மொழிதல்—பின் மொழிதல் ஆகிய சடங்குகள் முடிந்ததும், தங்களுடைய ஓட்டுகளைக்கொடுத்து தீர்மானத்தை ஆதரித்து, காங்கிரஸ் மந்திரிசபையை விரட்டியடிக்கத் தயாராகக் காத்துக்கொண்டிருந்தனர் 33 பேர்.

அவர்களாக ராஜினாமா செய்து தங்கள் கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் 'காங்கிரஸ்' மந்திரிகள் தவறிவிட்ட காரணத்தால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலமாக அவர்களைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளத் தயாராகிவிட்டனர் 60 பேர் கொண்ட சட்டசபையின் 33 உறுப்பினர்கள்.

இன்னும் இரண்டொரு விநாடிகள்.

அவ்வளவுதான்.

அதன்பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிவிடும்.

காங்கிரஸ் மந்திரிகள், மந்திரிப் பதவியை இழந்துவிடுவர்.

மந்திரி நாற்காலிகளைவிட்டு விரட்டப்பட்டுவிடுவர்.

இவ்வளவு தூரம் நிலைமை முற்றிய பிறகுதான், இனி தாமதிப்பதில் பயனில்லை—தங்களைக் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளத் தயாராகிவிட்டனர் எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதை நன்கு அறிந்துகொண்ட பிறகுதான், இன்னும் இரண்டொரு விநாடிகள் பொறுத்தால் தங்களை மந்திரி நாற்காலிகளை விட்டுக் கிளப்பி, வேறு நாற்காலிகளில் அமர்த்திவிடுவர் சட்டசபை மீனர்கள் என்பது தெரிந்த பிறகுதான், காங்கிரஸ் பிரதமர் எழுந்து; சட்டசபையில், தன்னுடைய ராஜினாமாவைச் சமர்ப்பித்திருக்கிறார்.

(15-ம் பக்கம் பார்க்க)

# பூவையரின் புரட்சிக் கீதம்

[ நா. நிலத்தலைவன், பி. ஏ. (ஹானர்ஸ்) ]

தென்றல் மணம் வீசும் பூஞ்சோலையில், புதுமை மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. அதே மலர்களில் எல்லாமே நம்மைக் கவருவதில்லை. மல்லிகையோ, மனோரஞ்சிதமோ தான் நம்மைக் கவரும். அதுபோல் எத்தனையோ நாடுகளில் பெண்கள் புரட்சி நடத்தியிருக்கின்றனர். ஆனால் ருஷ்யப் பெண்கள் நடத்திய புரட்சிதான் நம்மை— நம்மைமட்டுமல்ல — இந்த நானிலத்து மக்கள் அனைவரின் உள்ளங்களையும் ஈர்க்கும் இணையற்ற பெருமைபெற்று விளங்குகிறது.

மமதையாளர்கள் நடத்திய ஆட்சியை மண்டியிடச் செய்தனர், அந்த மங்கைகள். அடுப்பூதப் பிறந்த பெண்கள் அரசாங்கத்தைத் துடிதுடிக்கச் செய்தனர். நாடாள வந்தோருக்கு நடுக்கம் கொடுத்தபடி இருந்த அந்த நங்கைகள் நாட்டில் நல்லாட்சி பரவ, ஜனநாயகம் தழைக்கத் தான் புரட்சியில் இறங்கினர், அவர்கள் செய்த புரட்சி கண்டு உலகமே வியந்தது.

ருஷ்ய நாட்டில் ஜார் ஆட்சி நடந்தபோது, ஜனநாயகம் சவக்குழியில் புதைக்கப்பட்டிருந்தது. அப்போது பெண்கள், ஆண்களின் விளையாட்டுக் கருவிகளாகக் கருதப்பட்டனர். நாளெல்லாம் உழைக்கவேண்டும்; ஆனால் கொடுக்கிற கூலிக்கு மேல் அதிகம் வேண்டுமென்று கேட்டால் அல்லது கோரிக்கை விட்டால், குரல்வளை நெறிக்கப்படும். அடிமைகளாக இருந்த பெண்கள் சிறிது சிறிதாகப் புது உணர்ச்சி பெறலாயினர், ருஷ்யப் புரட்சியின் போது பல கஷ்டநஷ்டங்களை அனுபவித்து, இன்று, ஈடு இணையற்று, எல்லா நாடுகளுக்கும் உதாரணமாக, ஆண்களோடு சரி சமமாக உலவி வாழ்கின்றனர். ஆனால் இந்த நிலை பெற அவர்கள் சிந்திய இரத்தம், செய்த தியாகம் அளவற்றதாகும். புரட்சி கீதமா வெண்கள் இசைத்தனர். புரட்சிப் புயலா பெண்கள் வீசினர். என்றாலும் ஓர் இரு உதாரணங்களை இங்குக் குறிப்பிடுவோம்.

ருஷ்யப் பெண்கள் ஆங்காங்கு நடந்த போராட்டங்களில் பெரும் பங்கு கொண்டுழைத்து, தீவிரமாகப் போராடி தங்கள் நிலையைத் தாங்களே உயர்த்திக்கொண்டனர். கரென்ஹோம் மில்லில் 1872-ல் நடந்த வேலை நிறுத்தத்திலும், யரோஸ் லாவல் மில்லில் 1885-ல் நடந்த வேலை நிறுத்தத்திலும், ஸெயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் நடந்த பல போராட்டங்களில் அவர்கள் குறிப்பிடத்தக்க பங்கு கொண்டார்கள். பெண்களே அதிகமாக வேலைசெய்த தொழிற்சாலைகளில் அவர்தம் அவலநிலைக்கு ஒரு முடிவு கட்ட அவ்வப்போது அறப்போரும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தி, ஆளவந்தாரை அடக்கிவந்தார்கள். அத்தகைய ருஷ்ய மாதர் சிலரது வாழ்க்கைக் குறிப்புகள் கீழே தரப்படுகின்றன. அவை நம் நாட்டுப் பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் சுதந்தர உணர்ச்சியை பெறலாமென்றே கருதுகிறோம்.

**மார்பாய கோவ்லெவா** 1901-ல் ஸெயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில், பிரம்மாண்டமான வேலைநிறுத்தம் நடந்தது. அப்போது மார்பாயகோவ்லெவா 18-வயதுடைய பருவ மங்கை என்றாலும் போராட்டத்தின் முன்னணியில் நின்றாள் பல கஷ்டநஷ்டங்களை அடைந்தாள். சிறை புகுந்து சீரழிந்தாள். அதனால் ருஷ்ய வரலாற்றில் தன் பெயரைப் பொன்னெழுத்துக்களில் பொறித்துக்கொள்ளும் புகழ் பெற்றாள். லெனின் அவளை மிகமிக பாராட்டினார். "நம் தோழர்களோடு தோள் கொடுத்து நின்ற மார்பாய கோவ்லெவா என்ற பெண்ணைப்போன்றவர்கள் தரும் உற்சாகமும் ஊக்கமும் நமக்கு ஆயிரமடங்கு பலம் தருகிறது." என்று அவர் கூறியிருக்கிறார்.

போல்ஷ்விக் கட்சி நடத்திய போராட்டத்தில் பல நூற்றுக் கணக்கான பெண்கள் கலந்து கொண்டார்கள். கூட்டங்களில் பேசுவதுமுதல், குண்டுமாரி பொழிவதுவரை எல்லாவற்றிலும் அவர்கள் பயிற்சிபெற்றார்கள்.

**கிரஸனேவா** இவள் பதினறு வயதுப் பெண்ணாக இருந்தபோது போல்ஷ்விக் கட்சியில் சேர்ந்தாள். நாட்டுமக்கள் வியக்கும்படி 43 ஆண்டுகள் லெனின், ஸ்டாலின் முதலானோரின் கொள்கைகளைப் பரப்பினாள், உழைப்போரின் உரிமைக்காகப் போராடினாள்; கம்யூனிஸத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டாள் 1907-ல் அவள் சிறைப் பறவையானாள். விடுதலையானதும் வீறுபெற்றெழுந்த கிரஸனேவா, போராடும் துருப்புகளிடையே போல்ஷ்விக் கருத்துக்களைப் புகுத்தினாள். அதுகண்ட அரசாங்கம் 1908ல் அவளை மீண்டும் கைது செய்தது. விடுதலையானதும், அவள் தலைமறைவாகித் தன் தொண்டுகளை நடத்திவந்தாள். ஆனால் அராங்கத்தின் கழுகுக் கண்களிலிருந்து, அந்தக் கன்னி எத்தனை நாள் தப்பமுடியும்? மூன்றாம்முறை கைது செய்யப்பட்ட அவள், சைபீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டாள். சைபீரியாவிலிருந்து தப்பியோடிய கிரஸனேவா மீண்டும் தலைமறைவாக இருந்து கட்சிப் பிரசாரம் நடத்திவந்தாள். மறுபடியும் கைது செய்யப்பட்ட அவள் மனம் கலங்கினாள் இல்லை. நான்கு ஆண்டுகள் நாடு கடத்தப்பட்டும்! நங்கை மனம் உடையவில்லை... அதற்குள் நாட்டில் புரட்சி தோன்றி புதுமை விதைகளைத் தூவிவிட்டுச் சென்றது, அவள் இலட்சியம் வெற்றி பெற்றது. ஸோவியத் ஆட்சி அமைப்பில் பொறுப்பு மிக்க பல பதவிகள் அவளுக்குக் கிடைத்தன. செஞ்சேனையில் சேர்ந்து சிறப்புமிக்க பணிபுரிந்தாள் கல்விக்கூடங்களில் அவள் அறிவுச்சுடர் கொளுத்தினாள். நெருப்புப் பொறி பறக்கும் அவளது சொல்மாரிகள், சோவியத் மக்களுக்குப் புதுவாழ்வு தந்

தன என்றால் மிகையாகாது. சர்வதேசப் பெண்களின் விடுதலை இயக்கத்திற்கு வித்திட்ட அந்த வீராங்கனை 1947-ல் உயிர் துறந்தாள்.

**நிகோலயேவா** சின்னஞ்சிறு குழந்தையாக இருந்தபோதே கட்சியில் சேர்ந்த நிகோலயேவா பல ஆண்டுகள் தலைமறைவாக இருந்து தன் கட்சிக்குத் தொண்டு புரிய நேரிட்டது. பலமுறைகள் ஜாரின் கொடுங்கோல் ஆட்சியில் சிறையிடப்பட்ட அவள் சிந்தை கலங்காமல் தன் தொண்டைத் தொடர்ந்து நடத்திவந்தாள். நாடுகடத்தப்பட்டாலும், அவள் அங்கே தன் கட்சிக்கு ஆள் சேர்க்கும் பணிபுரிந்தாள். வோலோக்டா என்ற மாவட்டத்தில் நாடுகடத்தப்பட்டிருந்தபோது, அவள் ஒரு லினன் மில்லில் உழைக்கும் பெண் தன் சொந்த நகரான பெட்ரோகிராடுக்கு வர முடிந்தது. பெட்ரோகிராடின் பெண்கள் மாவட்டக் குழுவிலும், கம்யூனிட்டு கட்சி மத்தியக குழுவிலும் சேர்ந்து பெண்கள் நலன் காக்க இவள் பல தொண்டு புரிந்துள்ளாள். தன்னலமற்று உழைத்த இந்தப் புரட்சிப் பெண்ணுக்கு 'ஆர்டர் ஆப் லெனின்' (Order of Lenin) என்ற ஓர் உயர்ந்த பட்டம் அளிக்கப்பட்டது.

1936-ல் அகில யூனியன் தொழிற்சங்க மத்தியக்குழுவின் காரியதரிசியாக அவள் தேர்ந்தெடுக்கப்பட்டாள், பலப்பல மில்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் விஜயம் செய்து, தொழிலாளர்களின் நல்வாழ்விற்கான பல திட்டங்களை வகுத்து, அவர்களை கட்சியின் அங்கத்தினர்களாக்கினாள், போர் நடந்தபோது, ஜெர்மன் வெறியர்களுக்கு எதிராகப் பல தொண்டு புரிந்தாள் நர்ஸுகளும், மருத்துவச்சிகளும் நல்ல பயிற்சி பெறவும், ஆங்காங்கு சிகிச்சைசாலைகள் ஏற்படவும், தங்குமிடங்கள் அமைக்கப்படவும், குழந்தைகள் விடுதிகள் தோன்றவும நிகோலயேவா தான் காரணமாயிருந்தாள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. அவரது சொற்பொழிவுகள் போராடும் துருப்புக்களுக்குப் புத்துணர்ச்சிதந்தன. அவள் 1944ல் இயற்கை அடைந்தாள்.

**குர்க்கினா** குமரிப் பருவத்திலேயே புரட்சி இயக்கத்தில் புகுந்து போற்றத்தக்க தொண்டு புரிந்திருக்கிறாள் ஐவனோவா நெசவாளர் போராட்டத்தில் 18 வயதில் அவள் பங்கு கொண்டு, ஜாரிஸத்தின் ஆணிவேரையே ஆட்டிவைக்கும் ஆற்றல் பெற்றிருந்தாள் குர்க்கினா தற்போது அகில தொழிற் சங்க யூனியன் மத்தியக் குழுவில் பணிபுரிந்து வருகிறாள்.

முதல் முதலாக 'சர்வதேசப் பெண்கள் தினம்' கொண்டாட மார்ச் திங்கள் 8-ம் நாள் ருஷ்யப் பெண்டிர் முரசுகொட்டினர். தங்கள் உரிமையை உணர ருஷ்யப் பெண்களுக்கு இந்த நாள் ஒரு தூண்டுகோலாகத் துலங்கியது, 1913 மார்ச் 8-ம் நாள்.

ஸெயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் கூடிய பெண்களின் கூட்டத்தில், "உழைக்கும் பெண்கள் அனைவருக்கும், அவர்கள் அரசியல் போராட்டத்தில் கலந்து கொள்ளவேண்டி, வாக்குரிமை வழங்கப்படவேண்டும்", என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெண்களுக்காகத் தனியே சிலசெய்தித் தாட்கள் நடத்தப்பட்டன; அவை அவ்வப்போது புரட்சிக் கருத்துக்களைத் தூவி வந்தன: அதன் மூலம் புதுவாழ்வு பெற ஒரு வழிகாட்டியாக இருந்தன.

**க்ருப்ஸ்கயா** என்ற பெண் ஸெயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் ஒரு மார்க்ஸீயக்குழுவினருடன் சேர்ந்து, கட்சித் தொண்டு புரிந்துவந்தாள். ஞாயிறு பள்ளிக்கூடமொன்றில் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தபோது புரட்சித் தலைவர் லெனினைக் காணும் பேறு பெற்றாள். அன்று முதல் அவரது நெருங்கிய தொண்டனாக விளங்கினாள். லெனின் தோற்றுவித்த உழைப்போரின் உரிமைப்போராட்டக் கழகத்தில் அவள் பெரும் பங்கு கொண்டாள். லெனினை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த "இஸ்கரா" என்ற இதழின் ஆசிரியர் குழுவின் செயலாளராகத் தொண்டாற்றினாள். பலஇரகசியக்கடிதங்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு, தொல்லைகள் பலவற்றை எதிர்த்து, தன் தொண்டைத் தொடர்ந்து நடத்திவந்தாள் 1905-ல் போல்ஷ்விக கட்சிப் பிரசாரம் நடத்த தலைமறைவில் இரகசியமாகப்பணிபுரிய நேரிட்டது. புரட்சி நடந்தபோது, வெளி நாடுகளில் வசிக்கநேரிட்டது.

அப்போது கூட அவள் கட்சித் தலைவர்களோடு இரகசியமாகத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தாள். ப்ராலிடாரி, என்ற இதழின் செயலாளராகச் சிறிது காலம் பணி புரிந்தாள் "ப்ராவ்டா"வும் அவள் திறமையைப் பகிர்ந்து கொண்டது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டபோது நாட்டில் சிதறிக்கிடந்த சக்திகளை ஒன்று திரட்டி, பாஸிஸ் வெறியர்களை ஒழித்துக் கட்ட முயன்றாள். 1917ல் க்ருப்ஸ்கயா, போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழுவின் செயலாளராக இருந்து, உழைக்கும் மக்களிடையே, கல்வித் தொண்டு நடத்தி வந்தாள். புரட்சி நடந்தபோது, புகழத்தக்க செயல்களைச் செய்தாள். பிறகு ஸோவியத் குடியரசு தோன்றத் தன் உதவியைத் தந்தாள். கம்யூனிஸக் கல்வித்துறையில் அவள் ஒரு கலங்கரை விளக்கம்.

**உலியனோவா** என்ற பெண் தன் வாழ்நாள் முழுவதையுமே நாட்டுப் பணிக்கு 'அர்ப்பணம்' செய்துவிட்டாள் என்றால் அது மிகையாகாது. காரணம் அவள் லெனினின் தங்கை அவளுடைய மூத்த சகோதரன் அலெக்ஸாண்டர் 1887-ல் ஜாரிஸத்தின் கோரப் பற்களுக்குக் கொடும் பலியானான். 1896-ல் உலியனோவா பீட்டர்ஸ்பர்கிற்கு வந்தபோது. அங்கே புரட்சித் தீ பொங்கி எரிவதைக் கண்டாள். மூன்று ஆண்டுக் காலம் தலைமறைவாக இருந்து பணியாற்றிய அவள் கைது செய்யப்பட்டதும், நோவ்கோரோடிற்கு நாடுகடத்தப்பட்டாள். அது முடிவுற்றதும், மாஸ்கோவிற்குச் சென்று மறுபடியும் நாட்டுப் பணியில் இறங்கினாள். 1901-ல் கைது செய்யப்பட்டு, குபிஷேவ் என்ற இடத்திற்கு நாடுகடத்தப்பட்டாள். ஆனால் அங்கேயும் அவள் தன் தொண்டை நடத்தி வந்தாள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 1904-ல் விடுதலை பெற்றதும், அவளால் தொடர்ந்து பணிபுரிய முடியவில்லை. காரணம் அவள் உள்ளம் துவண்டுவிட்டதால் அல்ல. ஜாரின் போலீஸ் அவள் போகுமிடமெல்லாம் ஜல்லடை போட்டு அலசி அவளைக் கண்காணித்து வந்தது! பிறகு வெளிநாடுகளுக்குச் சென்றாள். லெனின் நடத்தி வந்த லட்சியப் போருக்குத் தன் ஒப்பற்ற உதவியைத் தந்தாள். இடையில் மார்க்ஸ் எழுதிய ஒரு நூலை மொழிபெயர்த்தாள். 1910-ல் ஸாரடோவிற்குச் செல்ல, அங்கு கைது செய்யப்பட்டு, வொலோக்டாவிற்கு நாடுகடத்தப்பட்டாள். அங்கே

(16-ம் பக்கம் பார்க்க)

# நிலாவும் தாமரையும்!

[ தில்லை—மறை முதல்வன் ]

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை கோல முழுதும் காட்டி விட்டால் காதற் கொள்ளையில் இவ் உலகம் சாமோ!........"

புத்தகத்திலிருந்த இந்த வரிகள் மீது படிந்திருந்த என் கண்கள் இதைப் பார்த்து முடித்ததும் தாமாகவே வானத்தை நோக்கி நிமிர்ந்தன! அங்கே......

நீலப் பட்டாடையை விரித்து வைத்திருப்பதுபோலத்தோன்றியது வானம்! யாரோ வெள்ளித் தட்டை எடுத்து வீசி எறிந்ததால் அது தொத்திக்கிடப்பதைப்போல தோற்றமளித்தது வானத்தின் விளிம்பிலே காணப்பட்ட வெண்ணிலவு! முத்துப் பேழையைத் தவறி கீழே போட்டுவிட்டதால் உடைந்துபோன அப்பேழையிலிருந்த முத்துக்கள் நாலாபுறமும் சிந்திச் சிதறிக் கிடப்பதைப் போலத் தோற்றமளித்தன வானத்துத் தாரகைகள்!

கண்களில் பட்ட இந்தக் காட்சியை வேறொரு சமயமாயிருந்தால் ரசித்திருப்பேன்—ரசித்திருக்கிறேன்! ஆனால் இப்போது... உள்ளம் மப்பும் மந்தாரமுமாக இருக்கும்போது......

எங்கோ தூரத்தில் நாய் ஒன்று ஊளையிட்டு அழுதது. இரவின் அமைதியிலே அந்த அலறல் பயங்கரமாக எதிரொலித்தது.

எதையுங் குறிக்கோளில்லாது வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் பார்வையில் வெறுப்பு குழைத்து பூசப்பட்டிருந்ததை நான் நன்றாக உணர்ந்தேன். என் முன் சூழ்ந்து நின்ற அந்தகாரத்தை உற்றுப் பார்த்தேன்! ஒன்றும் புலப்படவில்லை!

கிளைக்குக் கிளை தாவித்திரியும் குரங்கைப்போல என் பார்வை நிலை கொள்ளாது அங்குமிங்கும் அலைந்துகொண்டே இருந்தது!

என் மனதில் ஓரே துன்பக் குடைச்சல்! உள்ளத்திலே அமைதியில்லை! சுழன்றடிக்கும் சூறாவளியில் தத்தளிக்கும் படகைப் போலானது என் மனம்! அயர்வும், தளர்ச்சியும் உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும் சேர்த்து கட்டித் தழுவியது!

ஏதோ ஒரு சத்தம்—திரும்பிப் பார்த்தேன், ஏதோ ஒன்று தோட்டத்து குளத்தில விழுந்து அலைகளை எழுப்பிவிட்டிருந்தது. விழுந்த இடத்தைச் சுற்றி உயர எழும்பிய அலைகள், தாழ்ந்து, பரவி கடைசியில் மறைந்தே போயின!

அந்தக் குளத்திலிருந்த அல்லி ஒன்று வானத்திலிருந்த மதியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது! சின்னஞ் சிறு குழந்தையின் கன்னத்தைப் போல, மிருதுவாக வழவழவென்றிருந்த அதன் இதழ்களை..........! ஆனால் ஐயோ! அதன் அருகிலே......ஒரு தாமரை கூம்பிக் கிடந்தது! காலையில் கதிரவனின் தங்கநிற ரேகைகளின் தழுவலால் கண்விழித்த அந்தத் தாமரை இப்போது கண் மூடிக் கிடந்தது! சிவப்பேறி விரிந்திருந்த அதன் இதழ்கள் இப்போது வாடி, வதங்கிக் கிடந்தன.

பார்வையில் பட்ட அந்தத் தாமரை என்னுடைய துன்பத் துடிப்பைக் கிளறிவிட்டது. வேதனையின் வேகந்தாங்காது அழுதேன். கண்களில் பட்ட எந்தப் பொருளிலும் சோகம் கப்பிக் கிடப்பதாகவே தெரிந்தது. நெஞ்சை அழுத்திப் பிடித்தேன். அப்போதும் அதன் படபடப்பு அடங்கவில்லை! என்னுடைய வாழ்வு—!

அது ஒரு கலைந்த கட்டிடம்! நசுங்கிப்போன தங்கத் தாம்பாளம்! வாடிப்போன குளத்துத் தாமரை! ஆம்; என்னுடைய இதய மலரின் இன்ப இதழ்கள் கூம்பித்தான் போய்விட்டன! ஆனால் அந்தக் குளத்துத் தாமரையாவது மறுநாள் கதிரவனைக் கண்டால் மலரும், மணம் வீசும். அதுபோல......! ஒரு வேளை என் "கதிரவன்"—ஆம்; சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே சேர்ந்து விளையாடி, ஒத்து உறவாடி, உள்ளங் கலந்து பேசி, மகிழ்ந்த அந்த அன்பு நெஞ்சந்தான்—வந்தால் என் உள்ளம் மலருமா? மகிழ்ச்சி பிறக்குமா? அப்படியானால் என் கணவன் சந்திரனா? என் கணவன் சந்திரனை, சந்திரனைக் காதலிக்கும் அல்லி எவளாவது இருப்பாளா?

எங்கோ தொடங்கி, எப்படி எப்படியோ சென்ற என் சிந்தனை கடைசியில் பழைய நிகழ்ச்சிகளை, நான் மறக்க முயற்சித்தும் முடியாதுபோன அந்த நிகழ்ச்சிகளை கிளறிவிட்டது! பழைய நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்ப்பதில்தான் எவ்வளவு மகிழ்ச்சியும் பூரிப்பும் இருக்கிறது. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, என்னுடைய கடந்தகால நினைவுகள் வேதனையைத்தான் அதிகப்படுத்துகின்

றன. ஆனாலும் அவைகளை மறக்க முடியவில்லையே!

“நினைக்கையில் என்னெஞ்சம் எரியுதேடி, நினையாமல் இருப்பதற்கோர் வழியுமுண்டோ?” என்று பாடுவதைத் தவிர.........!

எவ்வளவோ முயற்சித்தேன், ஒட்டிப் படர்ந்த பழைய நினைவுகளை வெட்டி எறிய! ஆனாலும் முடிந்தால்தானே! கண்கள்தான் அங்குமிங்கும் அலைந்ததே தவிர மனம் பாலப் பருவத்து நிகழ்ச்சிகளைச் சுற்றியே ஓடியது. அவையெல்லாம், இப்போது ஏதோ பனி மூட்டத்தைப் போல, மங்கிய கனவைப்போல தோற்றமளிக்கின்றன.......

* * *

நான் என்று பிறந்தேனோ அன்றே எனக்கும் அவருக்கும் “முடிச்சு” போட்டுவிட்டார்கள் “பெரியவர்கள்”! அவர்—என் அத்தை மகன்—பெயர் சுந்தரம் பெயருக்கேற்ற உருவம்! கவலைப்பட்ட காலங்களில், கண்ணீர் சிந்திய நேரங்களில் ஆறுதல்கூறி தேற்றிய ஒரு அன்பு நெஞ்சம் யாரென்றால் அது சுந்தரந்தான்!

வாழ்க்கையைப்பற்றி தெரியாத, தெரிந்து கொள்ளத் தேவையில்லாத, பருவத்திலிருந்தே இருவரும் இணைபிரியாது பழகி வந்தோம். அப்பப்பா! அந்த நாட்களையெல்லாம் நினைத்துப் பார்த்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது, நினைக்க நினைக்க ஒரு மகிழ்ச்சி! எண்ண எண்ண ஒரு பூரிப்பு! நினைக்குந்தோறும் இதயத்தில் இன்ப அலைகளை எழுப்பும் அந்த நிகழ்ச்சிகள்...சுந்தரமும் நானும் சேர்ந்து விளையாடி மகிழ்ந்த அந்தச் சித்திரங்கள்...

தாளினால் கப்பல் செய்து மழைத்தண்ணீரில் ஓடவிட்டு விளையாடியது—மாலையில் ஆற்று மணலில் வீடு கட்டி கணவன் மனைவியாக விளையாடி மகிழ்ந்தது—வெண்ணிலவின் தண்ணொளியில் ஓடிப்பிடித்து விளையாடியது—புத்தகப் பையை தோளில் சாய்த்துக் கொண்டே, பள்ளி நோக்கி, கைகோர்த்துச் சென்றது—பள்ளி ஆண்டு விழாவில் பலருக்கும் முன்னே கூச்சப்பட்டுக் கொண்டே நாடகமொன்று நடித்தது—அப்படி நடித்த போது “ராஜா நீ’ “ராணி நான்” என்று பாட்டுப் பாடியது—ஆகிய இந்த நிகழ்ச்சிகள் அத்தனையுமே ஏதோ நேற்று நடந்ததைப் போலத் தோன்றுகின்றன. புகை மூட்டத்துக்குள்ளே தோற்றமளிக்கும் பொருள்களைப் போலத்தான் இந்த நினைவுகள் தெரிகின்றன.

நானும் சுந்தரமும் விளையாடியிருக்கிறோமே என்றாவது எங்களுக்குள் சச்சரவோ சண்டையோ நிகழ்ந்திருக்குமா? அது தான் கிடையாது! அப்படி நடந்திருந்தாலும் ஒரு வினாடிக்குப் பிறகு அது நிலைத்து நிற்காது. எங்கள் இரண்டு உள்ளங்களும் இணை கோடுகளைப் போல—ரயில்வே தண்டவாளங்களைப்போல—ஒத்தே போயின! சுந்தரம் இல்லா விட்டால் எனக்கு விளையாடவே பிடிக்காது. உலகமே சூன்னியமாகி விட்டதைப்போலத் தோன்றும். அவ்வளவு தூரத்துக்கு என் நிலை ஆகிவிட்டிருந்தது.

அது என்ன? காதல், காதல் என்கிறார்களே, அதுவா? இல்லை! இருக்க முடியாது! காதல் என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? என்று தெரியாத பருவமல்லவா அது! பின் என்ன? ஏதோ ஒரு வகையான, என்னால் விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சி! அன்பு! பாசம்!

ஆனால்—?

களங்கமில்லாத இரண்டு இளம் இதயங்களின் கூட்டுறவை வெட்டிப் பிரித்தது காலம்! எங்களிருவரிடையே மலர்ந்த பருவ வளர்ச்சியைக் கண்ட காலம் உடனே தடையுத்திரவு போட்டது! ஆனால் அந்தக் காலம் செய்த கோலம்.........!

“வெட்கம்” என்ற பெண்ணை எனக்குத் தோழியாக்கிவிட்டது அந்தக் காலம்! முன்பெல்லாம் எவ்வளவு ஆனந்தமாக ஓடி விளையாடுவேன். புள்ளி மானைப் போல துள்ளி ஓடுவேன்! வெண்கலத்தைத் தட்டினால் எழுமே சத்தம் ‘கலகல’ வென்று அதைப்போலசிரிப்பேன்! ஆனால் இப்போது—? கண்ணாடி மேல் நடப்பது போன்ற அவ்வளவு லாவகமான நடை! மின் மினி ஓசையைப் போல மெதுவான சிரிப்பு! அங்குமிங்கும் அலைவது, ஏன், வீட்டைவிட்டு அதிகமாக வெளியே போவதே கிடையாது. இந்த மாற்றத்தைக் கண்டு நானே திகைத்துப் போனேன்! ஆனால் இவைமட்டுமா?

சுந்தரத்தோடு, பழகியவள், விளையாடியவள் தானே நான்! ஆனால் இப்போது அவர் வந்து விட்டால இந்தப் பாழும் வெட்கம் எங்கிருந்தோ ஓடிவந்துவிடும் நெஞ்சு படபடக்கும்! வார்த்தைகள் குழறும்! கண்கள் தரையில் குத்திட்டு நிற்கும்! ஆனால் உள்ளத்தில் அவரைப் பார்க்க வேண்டும், அந்த மோகன உருவத்தை நிதானமாக, ஒருமுறை, தலையிலிருந்து கால்வரை பார்த்து ரசிக்கவேண்டும், என்ற ஆவல் குமிழ்விடும்! கடைசியில் சமாளித்துக் கொண்டு அவரை ஏறிட்டுப் பார்ப்பேன். ஆனால் அடுத்த வினாடி மறுபடியும் தாமாகவே கண்கள் தரையில் பதிந்துவிடும், அவர்தான் எப்படி மாற்ற மடைந்துவிட்டார்! அரும்பு மீசை—அழகிய வதனம்—அன்பான பார்வை—

(10-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 26—4—52 சனிக்கிழமை


# தன்னையே மறந்தார் மந்திரியார்!

## மக்களை மறவாமல் இருப்பாரா?

வெற்றி பெற்றவராக இருந்தாலும் சரி, தோல்வியடைந்தவராக இருந்தாலும் சரி, மாகாண சட்டசபைகளுக்கும் மத்திய சட்டசபைக்கும் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அபேட்சகராக நின்ற ஒவ்வொருவரும், தேர்தல் முடிந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட கால அளவு முடிவதற்குள், தேர்தலுக்காகத் தாங்கள் செலவிட்ட தொகை எவ்வளவு என்பதையும், அந்தத் தொகை எந்தெந்த வகையில் செலவிடப்பட்டது என்பதையும், தேர்தல் அதிகாரிக்கு அறிவித்துவிட வேண்டும.

எந்த அபேட்சகராவது அப்படி அறிவிக்கத் தவறிவிட்டால், அவர், ஐந்தாண்டு காலத்திற்கு, மாகாணங்களில உள்ள கீழ்சபை மேல் சபைகளுக்கோ அல்லது டில்லியில் உள்ள பாராளுமன்றத்தின் கீழ் சபை மேல் சபைகளுக்கோ நடைபெறுகிற உபதேர்தல், பொதுத் தேர்தல் எதிலும அபேட்சகராக நிற்கமுடியாது.

கணக்குக் காட்டத் தவறிய அபேட்சகர், ஐந்தாண்டு காலத்திற்கு, மேற்படி சபைகளில் எதற்கும அபேடசகராக நிற்கமுடியாது என்பது மட்டுமல்ல. அந்தச்சபைகளில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெறுகிற எந்தத் தேர்தலிலும் தங்களுடைய ஓட்டுகளைக் கூட யாருக்கும போட முடியாது.

கணக்குக் காட்டத் தவறிய அபேட்சகர், மேற்படி நான்கு சபைகளுக்குமுரிய தேர்தலில் தானே அபேட்சகராக நிற்கும் உரிமையையும் இழக்கிறார். அதோடு, அபேட்சகராக நிற்கும் பிறருக்கு ஓட்டுப்போடும் உரிமையையும் பறிகொடுக்கிறார்.

தேர்தலில் நின்று தோற்றுப் போனவர், தேர்தல் கணக்குகளைக் காட்டாமல் இரும்பாரானால், அவருக்குத் தரப்படுகிற தண்டனைகள் இவ்வளவோடு நின்றுவிடுகின்றன.

ஆனால், தேர்தல் கணக்குகளை அனுபபத் தவறியவர், தேர்தலில் வெற்றிபெற்ற எம். எல். ஏ. வாக இருந்துவிட்டாலோ, அவர், மேலும் ஒரு தண்டனையை, இந்த இரண்டு தண்டனைகளோடு கூட, அதிகப்படியாக அனுபவிக்கவேண்டியிருக்கிறது.

கணக்கை அனுப்பத் தவறிய காரணத்திற்காக, அப்படித் தவறிய எம். எல். ஏ., தமமுடைய எம். எல. ஏ. பதவியையே இழந்துவிடுகிறார்.

ஆம்! அவர் அரும்பாடுபட்டுப் பெற்ற சட்டசபை உறுப்பினர் ஸ்தானம் அடியோடு பறிபோய்விடுகிறது!

தேர்தல் கணக்குகளை, உரிய காலத்திற்குள் அனுபபத் தவறுகிற அபேடசகர்களுக்குத் தேர்தல் சட்டம விதித்திருக்கிற கடுமையான தண்டனைகள் இவை.

மாகாண சட்டசபைகளுக்கும் சரி, டில்லி சட்டசபைக்கும சரி, அபேட்சகர்களாக நிற்பவர்கள், ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் தேர்தல் பிரசாரத்துக்காகவென்று பணத்தைச் செலவழிக்கக் கூடாது என்று தேர்தல் சட்டம் தெரிவிக்கிறது.

அந்தக் குறிப்பிட்ட தொகைக்கு மேல் யார் யார் செலவழித்திருக்கிறார்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான அதிகாரத்தையும தேர்தல் சட்டம், தேர்தல் அதிகாரிகளுக்குத் தந்திருக்கிறது.

யார் யார் தங்கள் தேர்தல் செலவுகளை தேர்தல் சட்டம் வரையறுத்துக் காட்டியுள்ள எல்லைக்குள் முடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறியவும், யார் யார் தங்கள் தேர்தல் செலவுகளை அந்த எல்லையையும் மீறி ஓடவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவும், அப்படி எல்லை மீறி நடந்துகொண்டிருப்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும்தான். தேர்தல் கணக்குகளை அபேட்சகர்கள் அனுப்பி வைக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தேர்தல் முடிந்தவுடனே தங்களுடைய தேர்தல் செலவுக் கணக்குகளை அதற்கென்று உள்ள அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்க வேண்டியது, தேர்தலில அபேட்சகர்களாக நின்றவர்களுடைய முதற்பெருங் கடமை.

இந்தக் கடமையை நிறைவேற்ற எந்த அபேட்சகரும் தயங்கமாட்டார். தயங்கக் கூடாது. தயங்கினால், அதன் விளைவு, நாம் முதலிலேயே எடுத்துக் காட்டியிருப்பதைப்போல, அவருடைய ஓட்டுரிமையும் அபேட்சகராக நிற்கும் உரிமையும் ஐந்தாண்டு காலத்திற்குப் போய்விடும். தேர்தலில் வெற்றி பெற்றவராக இருந்தால் அவருடைய எம். எல். ஏ. பதவியும் மாயமாக மறைந்துவிடும்.

"ஓஹோ! அப்படியா சங்கதி! அப்படியானால் எந்த எம். எல். ஏ. தானாகட்டும், வெற்றி பெற்ற மறுநாளே கணக்குகளை அனுப்பிவிட மாட்டாரா?" என்று நீங்கள் கூறக் கூடும்.

இந்தச் சிறு கடமையைக்கூடச் செய்யத் தவறுபவர், மக்களுக்கு நன்மையைச் செய்வதிலே மட்டும்

எப்படி அன்பும் அக்கறையும் கொண்டவராக இருக்க முடியும் என்றும் நீங்கள் கேட்கக்கூடும்.

தேர்தல் கணக்கைக்கூட அனுப்ப மறக்கும் அளவு மறப்பொயமை யாக இருப்பவர் எம். எல். ஏ.வாக இருப்பதற்கே தகுதியற்றவர் என்றும நீங்கள் தீர்ப்பு வழங்கக்கூடும்.

கணககைக் காட்ட மறந்துவிட்டு தன்னுடைய சட்டசபை உறுப்பினர் பதவியை இழக்கும் அளவுக்கு நெடுந்தூக்கத்தில் ஆழ்ந்திருப்பவர் நம சென்னை மாகாணத்தில் யாரும் இருக்கமாட்டார் என்றுகூட நீங்கள் உறுதியுரை புகலக் கூடும்.

ஆனால் இருக்கிறார் ஒருவர்!

நம் சென்னை மாகாணத்திலேயே இருக்கிறார்!

தேர்தல் கணக்கைக் காட்டத் தவறிய திருவாளர் ஊர் ஊராகப் பவனி வந்தபடி இருக்கிறார்!

யார் அவர் என்று கேட்கிறீர்களா?

அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமா?

இவர் கம்யூனிஸ்ட் கட்சி எம். எல். ஏ. அல்ல! பிரஜா கட்சி உறுப்பினரல்ல! உழைபபாளிக் கட்சித் தோழருமல்ல—தி. மு. க. ஆதரவு பெறற திராவிடத் தீரருமல்ல.

அன்னை பாரத மாதாவின் அருமந்த புத்திரர்களிலே ஒருவர்தான் அந்தப் பேரறிவாளர்!

அசல் காங்கிரஸ்காரர்தான்!

கதராடை தரித்த கண்ணியவான் தான்!

அதிலும் சாதாரண காங்கிரஸ்காரரல்ல அவர்—வெறும் எம். எல். ஏ. அல்ல—காடாளும நற்பேறு பெற்றுள்ள அமைசசர்களிலே ஒருவர்—ஆச்சாரியார் மந்திரி சபையிலே அங்கம வகிப்பவர்—ஸ்தலஸ்தாபன இலாகாவுக்கு அமைச்சர்! பெயர், ஸ்ரீமான் என். சங்கர ரெட்டி! அலல அல்ல! கனம் ஸ்ரீமான் என். சங்கர ரெட்டி!

ஆமாம், தோழர்களே! பஜகோவிந்தம் பாடும ஆச்சாரியார் மந்திரி சபையிலே, பிரார்த்தனை செய்யும பேரறிவாவாளர்களில் ஒருவராகக் காட்சியளிக்கும ஸ்ரீமான் சங்கரனார்தான தன கணககைக் காட்டத் தவறியிருக்கிறார்! அப்படித் தவறிய காரணததால் தமமுடைய எம். எல். ஏ. பதவியை இழந்து தவிக்கிறார்!

கனம் சங்கரனார் இனி ஐந்தாண்டுக் காலத்திற்கு சென்னையில் உள்ளமேல்சபைகளுக்கோ கீழ்சபைகளுக்கோ டில்லியில் உள்ள மேல்சபை கீழ் சபைகளுக்கோ அபேட்சகராக நிற்கமுடியாது:

அபேட்சகராக நிற்கும் மற்றவர்களுக்குத் தன்னுடைய ஓட்டுகளை வழங்கவும் முடியாது.

தன்னை ஒரு எம். எல். ஏ. என்று அவர், இனி, சொல்லிக்கொள்ளவும் முடியாது.

கணக்கை அனுப்பத் தவறினார்—எனவே எம். எல். ஏ. ஸ்தானத்தை இழந்துவிட்டார் சங்கரனார்.

தேர்தல் அதிகாரி, சென்னை சர்க்காருடைய கெஜட் மூலமாகத்திட்டவட்டமாக அறிவித்துவிட்டார் தோழர் சங்கரனாருடைய எம். எல். ஏ. பதவி பறிபோய்விட்டது என்கிற பரிதாபச் சேதியை!

தேர்தல் கமிஷன் என்றோர் குழு இருக்கிறது. கணக்குக் காட்டத் தவறிய எம். எல். ஏ. க்களை மன்னித்து, அந்தப் பதவியை மீண்டும் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும் அதிகாரம் அந்தக் குழுவுக்கு உண்டு.

அந்தக் குழுவினர், ஐயோபாவம் என்று மனம் இரங்கி, கனம் சங்கரனாருக்காகப் பச்சாத்தாபப்பட்டு, அவருடைய எம். எல். ஏ. பதவியை அவருக்குத் திருப்பிக் கொடுத்தாலொழிய, சங்கரனாரின் பதவி பறிபோனது பறிபோனதுதான். அதை ஐந்தாண்டு காலத்திற்கு அவர் திருப்பிப் பெறமுடியாது.

ஒரு மாகாணத்தின் மந்திரியாக இருக்கிற யாரும், அந்த மகாணத்தின் மேல் சபையிலோ கீழ்சபையிலோ உறுப்பினராக இருக்கவேண்டும். அந்த இருசபைகளில எநதச் சபையிலும அவர் உறுப்பினராக இல்லாமலிருநதால், மநதிரியாக வந்ததிலிருந்து ஆறுமாத காலத்திற்குள், அவர், இரு சபைகளில் ஏதாவது ஒன்றில் உறுப்பினராக வந்தாகவேண்டும். அப்படி வரத் தவறினால் ஆறுவது மாதமுடிவில், அவர் தன்னுடைய மநதிரி பதவியை இழநதுவிடுகிறார் என்று இந்திய அரசியல் திட்டம் தெரிவிக்கிறது.

தேர்தல் கமிஷன் கனம் சங்கரனாரை மன்னித்தாலொழிய, அவர், ஐந்தாண்டு காலததிற்குள் இழந்த எம். எல். ஏ. பதவியைத் திருபபிப் பெறவும் முடியாது மேல்சபைக்குள்ளோ கீழ்சபைக்குள்ளோ புதிதாக நுழையவும் முடியாது.

ஆனால் அப்படி எந்த சபையிலும் உறுப்பினராக இல்லாதவரோ, ஆறு மாதத்திற்குமேல் மந்திரியாக இருக்க முடியாது என்று அரசியல் திட்டம் தெரிவிக்கிறது.

ஆகவே, தேர்தல் கமிஷனின் மன்னிப்பைப் பெறத் தவறிவிட்டால், கனம் சங்கரனார், ஆறுமாத காலத்திற்குப் பிறகு, மந்திரியாகவும் இருக்கமுடியாது.

**மத்திய சட்டசபைகள், சென்னை சட்டசபைகளுக்கு அபேட்சகராக நிற்கும் உரிமை!**

**மேற்படி தேர்தல்களில் ஓட்டுப் போடும் உரிமை!**

**மந்திரி நாற்காலியில் வீற்றிருக்கும் உரிமை!** ஆகிய இந்த மூன்று உரிமைகளையும் இழந்து விடுகிறார் கனம் சங்கரனார் தேர்தல் கணக்கைக் காட்டத் தவறிய ஒரு காரணத்தால்!

"ஐயோ பாவம்!" என்றுதான் சொல்லத் தோன்றும் முதலில்! ஆனால் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தாலோ, தன்னுடைய தேர்தல் கணக்கைக் கூடக் காட்டத் தவறிய இந்தப் பாரதபுத்திரர் பொதுமக்களுக்கு மட்டும என்ன நன்மையைச் செய்துவிடப்போகிறார்! இத்தகைய அசோக சக்ரவர்த்தி மந்திரியாக இருப்பதைவிட இல்லாமல் இருப்பதே நல்லது!" என்றுதான் சொல்லத்தோன்றும்.

தன்னையே மறந்துவிட்ட மந்திரியார், மக்களை மட்டுமென்ன மறக்காமலா இருந்துவிடுவார்?

தன்னுடைய கணக்குகளை ஒழுங்காக அறிவித்துத் தன்னுடைய எல். ஏ. பதவியைக் கூடக் காப்பாற்றிக்கொள்ளத் திறமையற்ற இச்சங்கரனார். பொதுமக்களுடைய உரிமைகளைக் காப்பாற்றித் தருவதில் மட்டுமா திறமையானவராகக் காட்சிதரப் போகிறார்?

தன்னுடைய தேர்தல் விவகாரத்திலேயே இவ்வளவு பொறுப்பற்றவராகக்காணப்படும் கதர்சட்டைக் கண்ணியவான், மாகாண அரசாங்கத்தை நடத்திச் செல்வதில் மட்டுமா பொறுப்புடனும் வகையுடனும் நடந்து கொள்ளப்போகிறார்?

(16-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அருமையான பேச்சு—மிடுக்கான நடை!

அவர்மட்டுமென்ன, நான் கூடத்தான் மாறிவிட்டேன்! கண்ணாடி முன் நின்று என் உருவத்தை நானே பார்த்து ரசித்துக் கொள்வேன்! என்னுடைய உடல் மட்டுமல்ல, உள்ளங் கூடத்தான் மாறிவிட்டது சிறு பருவத்திலிருந்த எண்ணங்கள், நினைவுகள், ஆசைகள், எல்லாம் இப்போது இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன! காதல் கதைகள் படிக்கும் விருப்பம்—இன்பமான கற்பனை நிகழ்ச்சிகளை மனத்திரையில ஓடவிட்டு ரசிக்கும் தன்மை—தனிமையில் அமர்ந்து ஆசைக் கோட்டைகள் பல கட்டி மகிழும் மனோபாவம் — அப்படிப் பட்ட உணர்ச்சிகள்தான் என் மனதில் மலர்ந்தன.

என்னைச் சிறகடித்து, கற்பனை வானவெளியில் இன்ப கீதம் பாடி பறந்த இரவுகள் எத்தனை! மணமான பின் எதிர் காலத்தில் எப்படி வாழவேண்டும் என்று நினைத்துக்கொண்டே போக்கிய இரவுகள் எத்தனை! காதல் கதைகளையும், நாவல்களையும் படித்துக்கொண்டே தூங்காதிருந்த இரவுகள் எத்தனை! நினைக்கும் தோறும் மகிழ்வை அள்ளி அள்ளி வீசும் கனவுகள்தான் எத்தனை!

ஒரு நாள் ஒரு கனவு கண்டேன்.........!

"........அழகான பூஞ்சோலை, தென்றல் தவழ்ந்து கொண்டிருந்தது. இதழ் விரித்து மணம் பரப்பிக்கொண்டிருந்தன வண்ண மலர்கள். வண்டுகள் மலர்களைச் சுற்றி வட்டமிட்டன. அந்த வண்டுகள், காதல் கீத மிசைத்துக் கொண்டே இன்பத்தேனை பருகிப் பரவசமடைந்தன.

அச் சோலையில் நடுவிலே ஒரு தடாகம். தடாகத்தைச் சுற்றி பச்சைப் பசேலென்ற புல்வெளி, கரையருகே அமர்ந்திருந்தேன் நான், தண்ணீருக்குள் தெரியும் என் உருவைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். திடீரென்று நீரில் என்னருகே ஒரு உருவம் தென்பட்டது. திரும்பினேன் — புன் சிரிப்புடன் சுந்தரம் நின்று கொண்டிருந்தார்!

என்னுள் ஏதோ ஒரு உணர்ச்சி பாய்ந்தோடியது! உள்ளம் மகிழ்ச்சிச் சுனையில் மிதந்தது! இதய பூரிப்பால் விம்மியது!

"கமலா—" என்று ஆசையோடு அழைத்துக்கொண்டே அருகில் அமர்ந்தார். என் உடல் சிலிர்த்தது — இன்பத்தினால்!

சிறிது நேரம் அமைதி நிலவியது! இருவரும் பேசவில்லை. என்ன பேசுவதென்றே புரியவில்லை! அமைதியாக, அசைவற்றிருந்த தண்ணீரைப் பார்த்துக்கொண்டிருந்தோம்.

"கமலா—" — அமைதியைக் கிழித்துக்கொண்டு ஒலித்தது அவர் குரல்!

"ஏன்......"—என் உதட்டிலிருந்து மெல்ல நழுவியது இந்தச் சொல்!

"நீ என்ன பேசாமடந்தையா?"

"ஏன்......" — மறுபடியும் இதே கேள்வி!

"இல்லை! உன்னோடு பேச வேண்டுமென்று ஆசையோடு வந்திருக்கிறேன். நீ வாயைத் திறக்கமாட்டேனென்கிறாயே. வாய் திறந்தால் முத்துக்கள் கொட்டியாவிடும்? உம்......! ஆனால் நீ அப்படி இருப்பதும் அழகாகத்தான் இருக்கிறது. நீ இப்போது எப்படி இருக்கிறாய் தெரியுமா?......"

"எப்படி?"

"தேவ லோகத்துக் கன்னியை பார்த்திருக்கிறீர்களா?..."

திகைத்துவிட்டார் சுந்தரம். வியப்பின் ரேகைகள் அவர் நெற்றியைக் கிழித்தன. ஆனாலும் சமாளித்துக்கொண்டார்.

"காவியங்களைப் படித்ததில்லையா கமலா! தேவலோகத்துக் கன்னிகள் மிகவும் அழகுடையவர்கள், என்று வர்ணிப்பார்களே புலவர்கள்! இருளைப்போலக் கூந்தல், வில்லைப் போன்ற புருவம், மீனைப்போன்ற கண்கள், கொவ்வையைப் போல இதழ்கள், முத்தைப்போன்ற பற்கள்......இப்படி அடுக்கடுக்காக எழுதுவார்களே, அதனால் தான் கூறினேன்!" — என்று விளக்கந் தந்தார் சுந்தரம்.

"இந்தப் புலவர்களே இப்படித்தான்! யாராவது தேவ கன்னியைப் பார்த்திருப்பார்களா? ஆனால் என்னமோ, நேரே தேவலோகம் சென்று பார்த்து வந்த மாதிரி, தேவலோகத்தின் சிறப்பையும், அங்குள்ள கன்னியரின் அழகையும் பக்கம் பக்கமாக வரிந்து தள்ளுவார்கள். நேரில் பலவற்றைக் காண்கிறோம்! ஆனால் அதையெல்லாம் விட்டுவிட்டு, பார்க்காததைப்பற்றி பிரமாதப்படுத்துவதே அவர்கள் தொழிலாக போய்விட்டது! ஏய்த்துப் பிழைப்பதே நோக்கமாயிருக்கும்போது.........! காவியங்கள் படித்ததில்லையா என்று கேட்டீர்களே! நேற்றுதான் ஒரு புத்தகம் படித்தேன். அதில் எழுதுகிறார், "உள்ளதை மறைத்தும், மறந்தும், புகழுக்கும், புளுகுக்கும் கொடியேற்றி திருவிழாச் செய்ய ஆரம்பித்த கால முதல் நம்மைப் புலவர்கள் கெடுத்துவிட்டார்கள் என்றால் அவர்களுக்கு கோபம் வரும்!" என்று! காஞ்சியூரான் கூறி

யிருப்பான் என்று கூறுதீர்கள், அக்கிரகாரத்து அதிசயப் பிறவி வ. ரா. தான் கூறியிருக்கிறார்!"

என்னுடைய இந்த பதில் அவருக்கு மேலும் வியப்பையும், திகைப்பையும் தந்தது! என்னிடமிருந்து அவர் இது போன்ற பதிலை எதிர் பார்க்கவில்லை—எதிர் பார்த்திருக்கவும் முடியாது! சிலகாலமாக நான் நாட்டு முன்னேற்றங் காண விரும்புவோரின் புத்தகங்களை படித்துவந்ததின் பலன்,தான் இது என்று அவருக்குத் தெரியாது! நான் படித்த புத்தகங்களை அவரும் படிக்க நேர்ந்தால்,.....................படிக்கவைத்தால்.............

இப்படி நான் எண்ணிக்கொண்டிருக்கும்போதே, மீண்டும் நிலவிக் கொண்டிருந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு ஒலித்தது அவர் குரல்!

"நீ என்ன சொன்னாலும் சரி கமலம், ஆனால்......! நீ திறமை மிக்க ஓவியன் வரைந்த அழகிய சித்திரம்! கைதேர்ந்த சிற்பி ஒருவன் வடித்தெடுத்த பொற்சிலை! கவிஞனின் காவிய நங்கை!......"

"இல்லை! நான் ஒரு பெண்!"

என்னை யறியாமலே இந்த பதிலைச் சொல்லிவிட்டேன், விரிந்திருந்த அவர் முகம் சுருங்கியது! ஏமாற்றமோ, அல்லது வருத்தமோ தெரியவில்லை, ஏதோ ஒரு உணர்ச்சி அவர் முகத்தில் பிரதிபலித்தது. பசிகாரன் பரபரப்போடு உள்ளே நுழைந்து இலையின் முன் அமரும்போது, உணவு இல்லை என்று கூறினால்.........! அதே நிலைதான் அவருக்கும்! அதை நான் நன்றாக உணர்ந்தேன். லேசான வருத்தமுங்கூட! உள்ளத்திலிருந்த அடக்க முடியாத ஆசையை அழகிய சொற்களால் வெளியிட்டார். அதை திடீரென்று வெட்டிப் பேசியது அவர் உள்ளத்தில் "சுருக்"கென்று தைத்துவிட்டது! புதுப் புடவையைக் கட்டிக்கொண்டு, உதட்டில் புன் முறுவல் மின்ன, உள்ளத்தில் ஆசை ததும்ப எதிரே வந்து நின்று, எப்படி இருக்கிறது என்று மனைவி கேட்கும்போது, கணவன் அதைப் பற்றி இரண்டு வார்த்தைகள் புகழ்ந்து கூறினால் அவள் மனம் எப்படி மகிழும்! அதை விட்டுவிட்டு.........

பிறகு என்னுடைய பேச்சு முறை மாறியது—மாறத்தான் வேண்டியிருந்தது! ஏனெனில் ஏதோ ஒரு உணர்ச்சி என்னுள் பாய்ந்தோடியது! உடல் சிலிர்த்தது! என்னுடைய ரத்த ஓட்டத்திலே ஒரு மாறுதல்! என்னுடைய ஒவ்வொரு அங்கத்திலும் பூரிப்பு பரிமளித்து நின்றது!

இருவரும் பேசிக்கொண்டேயிருந்தோம். இடையிடையே சிரிப்பும், கேலியும் கலந்திருந்தன! முதலிரவின்போது கணவனும், மனைவியும் பேசும் தொடர்பற்ற பேச்சு!

திடீரென்று அவர் "கமலம்......" என்று கூறிக்கொண்டே கையைப் பிடித்தார். அவருடைய குரல் கரகரத்தது!

தடுக்கவில்லை — தடுக்கவும் முடியவில்லை! நாக்கில் நீர் வற்றிப்போய்விட்டதுபோலிருந்தது! தொண்டையில் "களுக்" என்ற ஓசை! பேச முடியவில்லை!

"கடைசிவரை நாம் இன்று போல் சேர்ந்திருப்போமா?..." —அவருடைய குரலில் ஏக்கம் படிந்திருந்தது!

"ஏன் இந்த சந்தேகம்?" என்றேன்.

"இல்லை......" என்று இழுத்தார்.

ஆசைக் கயிற்றிலாடும் பம்பரமானது என் நிலைமை! வேகமாகச் சுற்றிய பம்பரம் வேகங் குறைந்து தலை சாயுமே, அது போல உணர்ச்சி வசப்பட்ட நான் அப்படியே அவர் மார்பில் சாய்ந்தேன்!

"கமலா........" என்று தழுதழுத்தக் குரலில் அழைத்துக் கொண்டே அவர் குனிந்து..................."

விழித்துக் கொண்டேன்! கனவு கலைந்தது. வியர்வையில் நனைந்துபோய்விட்டிருந்தன ஆடைகள். அன்று இரவு முழுவதும் தூங்கவேயில்லை. மறைந்துபோன கனவை நினைவுபடுத்தி மகிழ்வதில் ஈடுபட்டது என்னுடைய மனம்!

இப்படிப் பலப்பல இன்பக் கனவுகள்! ஆசைக் கோட்டைகள்! ஆனால்—வருங்காலத்தில் செயல்களாக மலர்ந்து மணம் வீசப்போகின்றன என்று நான் கருதியிருந்த அந்தக் கனவுகளும், ஆசைக் கோட்டைகளும் சிதறுண்டு போகுமென்று நான் நினைக்கவேயில்லை!

காலம் எங்களிருவரிடையே செய்த கோலத்தைக் கவனித்தேனே ஒழிய, எங்கள் குடும்பங்களில் விளைந்த மாறுதலைப் பற்றிக் கவனிக்கவேயில்லை!

என்னுடைய பாவாடை, சேலையாக மாறிய காலத்தில் எங்கள் குடும்பத்தின் அந்தஸ்து மிகவும் உயர்ந்துவிட்டது. ஓட்டு வீடு, மாடி வீடாக மாறியது! கடன் அடைக்கப்பட்டு பணத்தைப் பாதுகாக்க இரும்புப் பெட்டி வாங்கப்பட்டது! புதிதாக வாங்கிய நிலபுலன்களைக் கவனிக்க, பார்த்துவர, வண்டி வாங்கியாகிவிட்டது! வெள்ளை உடை — மிடுக்கான நடை—அலட்சியப் பார்வை—மிரட்டிடும் பேச்சு — இப்படி

(14-ம் பக்கம் பார்க்க)

# பண்டித நேரு எங்கே?

"இழுத்துச் சாத்து கதவுகளை!"— ஆக்ரோஷத்துடன் ஆணை பிறப்பித்துவிட்டனர் ஆமதாபாத் மில் முதலாளிகள்.

"ஆஹா! அப்படியே செய்துவிட்டோம்!"—அடக்கத்துடன் விடை கூறுகின்றனர் அவர்களுடைய ஏவலாட்கள்.

ஆமதாபாத், வடஇந்தியாவில் உள்ள முக்கியமான ஒரு நகரம்.

தென்னிந்திய மக்களின் பொருள்வளத்தைச் சுரண்டுவதற்காக வட இந்தியாவிலிருந்து ஏராளமான துணிவகைகள் தென்னிந்திய மார்க்கெட்டுகளில் அடிக்கடி வந்து குவிகின்றன அல்லவா, அந்தத் துணிவகைகளில் ஒரு பெரும் பகுதியை உற்பத்தி செய்யும் "உன்னத" மண்டலம் ஆமதாபாத்.

இந்திய முதலாளித்வத்தின் முக்கியமான ஒரு கோட்டை, ஆமதாபாத்.

ஏறத்தாழ அறுபத்துநான்கு துணிமில்கள் இருந்துவருகின்றன ஆமதாபாத்தில்.

ஒவ்வொரு மில்லும் இலட்சக்கணக்கான வெள்ளிப் பணங்களை முதலாளிகளுக்கு அள்ளிக்கொடுத்தும் அமுதசுரபியாக இருந்துவருகிறது.

அந்த அறுபத்துநான்கு மில்களிலிருந்து ஆமதாபாத் முதலாளிகள் இதுவரை சம்பாதித்திருக்கிற பணம், ஆயிரம் பதினாயிரம் என்ற கணக்கில் அல்ல, கோடி, பல கோடி என்ற கணக்கில்தான் இருக்கும்.

ஒவ்வொரு முதலாளியும் ஒவ்வொரு பணத்தோட்டமே அமைத்துவிட்டிருக்கின்றனர், ஆமதாபாத்தில் கிடைத்த இலாபக் கணக்கிலிருந்து.

இவ்வளவு இலாபத்தை அள்ளிக்கொடுக்கும் ஆமதாபாத் மில்கள், இரவு, பகல், இரண்டு வேளையும் ஓயாமல் பணியாற்றியபடி இருப்பது வழக்கம்.

பகலிலே பணியாற்றுவதற்கென்று பல ஆயிரம் தொழிலாளர்களும், இரவிலே தொழில் புரிவதற்கு வேறு பல ஆயிரம் தொழிலாளர்களும், வேலைக்கு அமர்த்தப்பட்டுப் பணியாற்றிவந்தனர் ஆமதாபாத்தில்.

இப்போது, திடீரென்று, ஆமதாபாத் முதலாளிகள், இரவு வேலை வேண்டாம்—பகல் வேலைமட்டுமே போதும் என்று கூறிவிட்டனர்.

இரவு நேரத்தில் மில் கதவுகளை இழுத்துச் சாத்திப் பூட்டிவிடுங்கள் என்று தம் ஏவலாளர்களை நோக்கிக் கட்டளை பிறப்பித்துவிட்டனர்.

ஆமதாபாத்தில் மொத்தமுள்ள அறுபத்திநான்கு மில்களில், இருபத்தாறு மில்களின் முதலாளிகள், இப்படிப்பட்ட "மூடுவிழா" உத்திரவுகளை உருவாக்கிவிட்டனர்.

மே மாதம் முதல் தேதி முதல், இருபத்தாறு மில்கள், ஆமதாபாத் நகரில், இரவுநேரத்தில் பணியாற்றமாட்டா,

அந்த இருபத்தாறு மில்களும் இரவுநேரத்தில் மூடப்படப்போவதன் காரணமாக ஏறத்தாழ முப்பதாயிரம் தொழிலாளிகள்; மே மாதத்திலிருந்து, வேலையை இழந்து தவிக்க இருக்கிறார்கள்.

மே மாதத்திலிருந்து, வேதனை அவர்களை வாட்டும். வறுமை அவர்கள் குடும்பத்தை வதைக்கும் வாழ்க்கைப் புயல், அவர்களுடைய பெண்டு பிள்ளைகளைச் சுழலும் சூறாவளிக்கு இரையாக்கும்.

பசி! பசி! என்கிற கூக்குரல், பட்டினி பட்டினி என்கிற பரிதாபச் சிந்து, வேதனை வேதனை என்கிற பெருமூச்சு, மே மாதத்திலிருந்து பிறக்கும் அந்த முப்பதாயிரம் குடும்பங்களிலிருந்து.

என்றாலும் ஆமதாபாத் முதலாளிகள், அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை — அவர்கள் ஏன் கவலைப்படப் போகிறார்கள்—அவர்கள்தான் முதலாளிகளாயிற்றே— இழுத்துச் சாத்து கதவுகளை என்று அழுத்தந்திருத்தமாகக் கட்டளை பிறப்பித்துவிட்டனர்.

ஏனய்யா இப்படி மில்களை மூடுகிறீர்கள் என்று கேட்டால் என்ன விடை கூறுகிறார்கள் தெரியுமோ அந்த மில் முதலாளிகள்?

"மார்க்கெட்டிலே துணி தேங்கிவிட்டது—துணி வாங்கலேயோ துணி என்று கூவிக் கூவி விற்றாலும் வாங்குவாரில்லை—இருக்கும் துணியே விற்காதபோது இன்னமும் துணியை உற்பத்தி செய்வதால் என்ன இலாபம்— ஆகவேதான் மில்களை மூடுகிறோம்" என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

உண்மைதான் அவர்கள் கூறுவது.

மார்க்கெட்டில், துணி வகைகள் வாங்குவாரின்றி தேங்கித்தான் கிடக்கின்றன.

ஆனால் மார்க்கெட்டில் துணிவகைகள் தேங்கிக் கிடக்கின்றனவே தவிர, பொதுமக்கள் எல்லோருக்கும் போதுமான அளவு ஆடைவகைகள் அவரவர்களுடைய இல்லங்களில் இருக்கின்றன என்று கூறிவிடமுடியுமா?

அப்படிக் கூறவும் முடியாது.

மார்க்கெட்டிலே துணி தேங்கிக் கிடக்கிறது. அதே நேரத்தில், உடலை மறைப்பதற்கு ஒரு முழம் கந்தைகூடக் கிடைக்கவில்லையே என்று ஏங்கித் தவிக்கும் ஏழைகள் ஏராளமாக இருக்கிறார்கள்.

நாளொன்றுக்கு இரண்டணா நாலணா என்று சம்பாதிக்கும் பாமர ஏழைகள் மட்டுமல்ல, மாதம் ஒன்றுக்கு எண்பது ரூபாய் நூறு ரூபாய் என்று ஊதியம் பெறுகின்ற சர்க்கார் குமாஸ்தாக்களைப் போன்ற மத்தியதர வகுப்பினர் கூட, அவர்களுக்குப் போதுமான அளவு ஆடைவகைகளை வாங்கி உபயோகிக்க முடியவில்லை.

காரணம், ஆடைவகைகளின் விலை, அவர்களாலெல்லாம் எட்டிப் பிடிக்கமுடியாத உயரத்திற்குச் சென்றுவிட்டிருக்கிறது.

யாராவது ஒரு மனிதன் தனக்கு ஒரு சட்டை தைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணி, மார்க்கெட்டுக்குப் போனால், அங்கே, சட்டைத் துணியின் விலை கெஜம் மூன்று ரூபாய், என்று இருக்கிற அறிவிப்புப் பலகையைப் பார்க்கிறான்.

ஒரு சட்டை தைப்பதற்குச்சாதாரணமாக மூன்று கெஜம் துணி தேவைப்படுகிறது.

ஒரு கெஜத்தின் விலை மூன்று ரூபாய் என்றால் மூன்று கெஜத்தின் விலை ஒன்பது ரூபாய் ஆகிறது.

தையற்கூலி, சட்டை ஒன்றுக்கு ஏறத்தாழ ஒரு ரூபாய் என்ற விதத்திலே ஆகிறது.

ஆகமொத்தம் ஒரு சட்டை தனக்குத் தேவை என்று கருதுகிறவன், பத்து ரூபாய்களை எண்ணி எடுத்து வைத்தால்தான், ஒரு சட்டை அவனுக்குக் கிடைக்கும்.

மாத ஊதியம் எண்பது ரூபாய் என்கிற நிலையில் இருப்பவன், இந்த நிலையில், எப்படி சட்டை தைத்துக்கொள்ள முடியும்?

ஆகவேதான் ஆடைவகைகள் வாங்குவாரின்றித் தேங்குகின்றன மார்க்கெட்டில்.

துணி வாங்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது மக்களிடம். வாங்கித்தானாகவேண்டுமென்ற அவசியமும் இருக்கிறது. போட்டுக்கொண்டிருக்கிற சட்டையும் பொத்தலாகத்தான் இருக்கிறது. கட்டிக் கொண்டிருக்கிற வேட்டியும் கிழிந்துதான் போயிருக்கிறது, புதிய வேட்டி, புதிய சட்டை, கட்டாயம் தேவை, மக்களுக்கு. ஆனாலும் அவர்கள் வாங்கவில்லை. வாங்கமுடியவில்லை. விலைகள் அவர்களை விரட்டியடிக்கின்றன மார்க்கெட்டிலிருந்து.

மக்களுக்கோ துணி தேவையாக இருக்கிறது. மார்க்கட்டிலோ துணி தேங்கிக் கிடக்கிறது, என்றாலும், துணி, மக்களை நெருங்க மறுக்கிறது. காரணம், விலை, மிக மிக அதிகம்.

எனவே, மார்க்கெட்டிலே தேங்கிக் கிடக்கும் துணி, ஆடை தேவை என்று அல்லற்படும் மக்களுடைய இல்லங்களுக்குச் சென்றாகவேண்டுமானால், அதற்குரிய ஒரே வழி, விலைகளைக் குறைப்பதுதான்.

ஆனால் மில் முதலாளிகளோ விலைகளைக் குறைப்பதற்குப் பதிலாக, துணி உற்பத்தி குறைந்தால், இப்போது மார்க்கெட்டில் தேங்கிக் கிடக்கும் துணிவகைகள் விரைவில் விலையாகிவிடும். தேங்கிக்கிடக்கும் துணிவகைகள் விரைவில் விலையாகிவிடும், தேங்கிக் கிடக்கும் துணிவகைகள் விரைவில் விலையாகிவிட்டால், பிறகு, மார்க்கெட்டிலே, துணிப்பஞ்சம் உருவாகும். துணிப்பஞ்சம் உருவாகிவிட்டால், மக்கள், பிறகு, எவ்வளவு அதிக விலை கொடுத்தும் துணி வாங்கத் தயாராக இருப்பார்கள். அப்படி மக்கள் அதிக விலை கொடுக்கத் தயாராக இருக்கிற நேரத்தில் மீண்டும் மில்களைத் திறந்து, ஆலைகளை ஓட்டி, ஆடைகளை நெய்தால், இலாபம் ஏராளமாகக் கிடைக்கும். ஆகவே, இப்போதைக்கு மில்களை மூடிவைப்பதுதான் நல்லது — என்று, ஆமதாபாத் முதலாளிகள் எண்ணியிருக்கிறார்கள். எனவேதான் மில்களை அவசர அவசரமாக மூடியிருக்கிறார்கள்.

மார்க்கெட்டிலே, துணி, ஏற்கெனவே வாங்குவாரின்றித் தேங்கிக் கிடக்கிறது. இந் நிலையில் மேலும் மேலும் துணிகளை உற்பத்தி செய்து குவித்துக்கொண்டேயிருந்தால், துணிகள் மேலும் மேலும் தேங்கி, அவற்றின் விலைகள் மிகவும் இறங்கிவிடும். அப்படி விலைகள் இறங்கிவிட்டால், ஆமதாபாத் முதலாளிகளுக்குக் கிடைக்கும் இலாபம் குறைந்துவிடும். தங்களுக்குக் கிடைத்துவருகிற இலாபம் தேய்ந்துபோவதை வரவேற்பார்களா முதலாளிகள்? எனவேதான், அவர்கள், உற்பத்தியை நிறுத்தி, மார்க்கெட்டில் உள்ள துணிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, ஒரு துணிப் பஞ்சத்தை உருவாக்க முன்வந்திருக்கிறார்கள்.

உற்பத்தியைக் குறைத்தால் விலை ஏறும். உற்பத்தியை அதிகரித்தால் விலை இறங்கும். இந்த உண்மை, முதலாளித்வத்தின் அரிச்சுவடி. இந்த அரிச்சுவடியை ஐயம்திரிபுற அறிந்திருக்கிறார்கள் ஆமதாபாத் முதலாளிகள். ஆகவேதான் அவர்கள் உற்பத்தியைக் குறைக்க முன்வந்திருக்கிறார்கள்.

அவர்களுடைய இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்காக அவர்கள் மில்களை மூடுகிறார்கள். அப்படி மூடுவதாலே முப்பதாயிரம் தொழிலாளிகளின் குடும்பம் வேலையிழந்து தவிக்கும் என்பதை நன்றாகத் தெரிந்திருந்தும் மூடுகிறார்கள்.

* * *

உற்பத்தியை அதிகரிக்கவேண்டும், உற்பத்தியை அதிகரிக்கவேண்டும், என்று, இந்தியாவின் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு ஓயாமல் பேசிவருகிறார், தொழிலாளர்களின் கூட்டங்களை அவர் காண்கிற நேரத்தில் எல்லாம் இந்தத் [illegible]போபதேசத்தைப் புரிய. அவர் ஒரு நாளும் தயங்குவதில்லை.

தங்களுடைய ஜீவாதாரப் பிரச்சினைகளில் வெற்றி பெறுவதற்காக, எங்கேயாவது தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துவிட்டால், உடனே, பண்டிதர் அவர்களிடம் சென்று, "வேலை நிறுத்தமா—இந்தக் காலத்திலா—இந்திய நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இந்த வேளையிலா—தயவு செய்து வேண்டாம்—வேலை நிறுத்தம் நடந்தால் உற்பத்தி குறைந்துவிடும் — உற்பத்தி குறைந்துவிட்டால் இந்திய மக்களின் துயரங்கள் அதிகமாகும்-ஆகவே, வேலை நிறுத்தம் செய்யாதீர், உற்பத்தியைக் குறைக்காதீர்" என்று விளக்கவுரை பகர்வது வாடிக்கை.

கஷ்டப்பட்டு உழையுங்கள்— உற்பத்தியை அதிகரியுங்கள் என்று அவர் பேசாத வேளையில்லை. உபதேசிக்காத நேரமில்லை.

ஆனால், இதோ, ஆமதாபாத் முதலாளிகள், உற்பத்தியைக் குறைக்கிறார்கள். உற்பத்தியைக் குறைப்பதற்காகவென்றே மில்களை மூடுகிறார்கள்.

மில்களை மூடுகிறார்கள் என்பதை நன்றாக அறிந்திருந்தும் பண்டித நேரு, இன்றைய தினம் வரையிலே, இந்த அடாத செயலைக் கண்டித்து ஒரு சிறு வார்த்தை கூடக் கூறினாரில்லை. தன் சுட்டுவிரலைக்கூட அசைத்தாரில்லை.

தொழிலாளர்களுடைய வேலைநிறுத்தத்தால்கூட உற்பத்தி பாதிக்கப்படக்கூடாது என்று உபதேசம் புரிந்துவந்த பண்டிதர், உற்பத்தியைப் பெருக்குங்கள் — உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று நித்த நித்தம் உற்பத்தி அதிகமாக அதிகமாகத்தான் நம் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து பெருகும் என்று கூறிவந்த பண்டிதர், ஆமதாபாத் முதலாளிகள், தைரியமாகவும் துணிச்சலாகவும் உற்பத்தியைக் குறைக்க முன்வந்திருக்கிற இந்த நேரத்தில் ஏன் வாய்மூடி மௌனியாகிவிட்டிருக்கிறார்?

எங்கே பண்டிதர் இப்போ?
எங்கே இருக்கிறார்?

எங்கே? எங்கே?

———

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறிவிட்டார் என் தந்தை! பணம் கையில் ஏறியவுடனேயே மனிதனுக்கு சில தன்மைகளும் கூடவே வந்துவிடுகின்றன. இல்லாவிட்டால், முன்பில்லாத பழக்க வழக்கங்கள் இப்போது மட்டும் தோன்றுவானேன்?

ஆனால் அதே நேரத்தில்—?

சுந்தரத்தின் குடும்பம் மிகவும் நொடித்துப் போயிருக்தது! ஏற்கனவே சிறிது தளர்ந்துபோன குடும்பம். போதாததற்கு, சுந்தரத்தின் தந்தை போட்டிருந்த சில்க் ஜிப்பாவைக் கழட்டி எறிந்துவிட்டு, முழங்கால் வரை தொங்கக் கூடிய, இரண்டு பக்கமும் பை வைத்த கதர் ஜிப்பாவைப் போட்டுக் கொண்டு தேர்தலுக்கு நின்றார்! பணத்தைத் தண்ணியாகக் கருதி கூட செலவு செய்தார். ஆனாலும் வெற்றி மங்கை அவர் இருந்த திசையிலேயே வரவில்லை! இப்போது எப்படியாவது வெற்றியடைந்து விட்டால் பிறகு செலவானதொகையெல்லாம் சேர்த்து வட்டியும், முதலுமாக சம்பாதித்து விடலாம் என்பதுதான் அவருடைய எண்ணம்! சுந்தரம்கூட இதை ஒருநாள் என்னிடம் கூறி வருத்தப்பட்டார். ஆனால் வெற்றிபெற வில்லையே, கதராடை கட்டியும்! என்ன செய்வது?

என்னுடைய குடும்பம்—சுந்தரத்தின் குடும்பம்! இரண்டும் இரண்டு துருவங்களாக மாறிவிட்டன—செல்வாக்கில், அந்தஸ்தில், சொத்தில்! ஏற்றத்தாழ்வு வளர்ந்து கொண்டே சென்றது இரு குடும்பங்களுக்கிடையேயும்!

எங்கே இந்த ஏற்றத் தாழ்வினால் சுந்தரமும் நானும் ஒன்றாக சேர்ந்து வாழமுடியாது போய் விடுமோ என்று கலங்கினேன். ஆனால்...... கடைசியில் நான் நினைத்ததுபோலத் தான் நடந்தது!

இரு குடும்பங்களும் சம அந்தஸ்தில் இருக்கபோது—நானும் சுந்தரமும். கணவன் மனைவியாக வாழ சம்மதித்தார்கள். ஆனால் இப்போது—? பணமும் பதவியும் கிடைத்தவுடன் என் தந்தை அந்த நான் முடிவை ஏற்க மறுத்துவிட்டார்.

"பணம் படைத்த என் மகளை, என்னுடைய அந்தஸ்துக்குத்தகுந்த இடத்தில்தான் கொடுப்பேனே தவிர, கஞ்சிக்குக் கதியில்லாத அந்த தரித்திரன் வீட்டில் சாகவிடமாட்டேன்" என்று பழைய உறவையும் நட்பையும் மறந்துவிட்டுக் கூறினார்! அதுகூடப் பறவாயில்லை, உணர்ச்சிகளால் உருவாக்கப்பட்ட பெண் நான் என்பதை மறந்துவிட்டு, என்னை ஏதோ வியாபாரப் பொருளைபோலல்லவா கருதிப் பேசிவிட்டார்! இந்த ஆண்களே இப்படித்தானா?

அப்பாவின் இந்த முடிவைக் கேட்டு நான் பெரிதும் கலங்கிப் போனேன். நான் ஒரு பெண்! தந்தையின் விருப்பத்தை மகள் மறுக்கலாமா? ஒரு ஆணின் பேச்சை, பெண் தட்டிப் பேசலாமா! அப்படி செய்து விட்டால், "அடக்கமில்லாதவள்" என்ற பட்டத்தைத்தானே தருகிறது இந்தச் சமூகம்! என்ன செய்வது? பெண்ணின் விருப்பத்தைக் கேட்டு மணம் முடிக்கும் வழக்கந்தான் இந்த நாட்டிலேயே கிடையாதே!

"இவரைத்தான் நான் மணம் செய்துகொள்வேன்" என்று கூற எனக்குத் துணிவு கிடையாது! அப்படி என்னை—என்னை மட்டுமல்ல, இந்த நாட்டுப் பெண்களையே வளர்த்து விட்டார்கள்! நான் என் விருப்பத்தைக் கூறியிருந்தால்கூட அது நிறைவேறியா இருக்கப்போகிறது! ஆண் வைத்ததுதானே சட்டம்! கடைசியில் ஒரு நாள்.........!

யாரோ ஒருவர்—நான் பார்த்திராத. பழகியிராத ஒருவர்—அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து என் கழுத்தில் "சுருக்குக் கயிற்றை" கட்டினார்!

ஆம், அவர் கட்டிய தாலி, எனக்குச் சுருக்குக் கயிறுதான்! என்னுடைய மகிழ்ச்சிக்கும் இன்பத்துக்கும் வந்த சுருக்குக்கயிறு! அது, அவருக்கு நான் அடிமை என்பதைக் காட்டும் அடையாளச் சீட்டு! அவ்வளவுதான்!

நான்—அவருடைய இன்ப லீலைகளுக்கு ஒரு கருவி! பள்ளியறை விளையாட்டிலே உபயோகப்படுத்தும் பதுமை! அவருடைய வெறியைத் தணிக்க உதவும் ஒரு சதைப் பிண்டம்!

என் கணவர், ஒருவேளை நல்லவராக, அழகானவராக, கணவன் என்ற வார்த்தையை புரிந்து கொண்டவராக இருக்கலாம். ஆனால்......நான் விரும்பிய—அன்பு செலுத்திய—அந்த அன்பு நெஞ்சம்—சுந்தரம் — இல்லையென்னும் போது......!

அன்று கூம்பிய என் இதயம் இன்னும் மலரவேயில்லை! அன்று என்னை விட்டோடிய மகிழ்ச்சி இன்னும் திரும்பவேயில்லை!

இனி, இழந்த இன்பம் கிடைக்குமா? புதுவாழ்வு உண்டா?.........

* * * *

பழைய நிகழ்ச்சிகள் என்ற வானவெளியில் பறந்துகொண்டிருந்த என் சிந்தனைப் பட்டம் மெள்ள மெள்ள இறங்கியது! ஆம்; கடந்துபோன வாழ்வைச் சுற்றிப் படர்ந்த என் நினைவு திரும்ப என்னிடமே வந்தது!

நிமிர்ந்து பார்த்தேன். சற்று முன்பு நிர்மலமாக தோன்றிய வானத்தில் இப்போது அங்குமிங்கும் சில கருமேகங்கள் சிதறிக் கிடந்தன! வெண்ணிலவை இழுத்துப்பிடித்து அணைத்துக்கொண்டது ஒரு மேகம்! அடுத்த வினாடி, அந்த மேகத்தின் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு வெளியே வந்தது நிலவு! ஆனால் அதற்குள் மற்றொரு மேகம் ...............

அதற்கு மேல் பார்க்கப் பிடிக்காது தலையைத் தாழ்த்தினேன்! அப்படி நான் பார்வையை வானத்திலிருந்து பெயர்த்தெடுத்தபோது... வானத்தின் உச்சியிலே ஜொலித்துக் கொண்டிருந்த ஒரு தாரகை சரிந்து விழ்ந்தது அடிவானை நோக்கி! அது என் மனதை ஒரு கலக்கு கலக்கிவிட்டது! என் வாழ்வும் அப்படித்தானே சரிந்துவிட்டது என்பதை நினைக்கும்போது...

"உள்ளத்தில் ஒருவரைக்
காதலித்தே
மற்றொருவரைத் தீண்டுதல்
கொடுமையன்றோ!......"

இசைத்தட்டில் பதிவாகியிருந்த, வரிகள் காற்றில் கலந்துவந்து என் காதில் விழுந்தன! இல்லை! இல்லை! என் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தன! சம்மட்டி கொண்டு உள்ளத்தில் ஓங்கி ஓங்கி அடித்தன!

காதலித்தவரை விட்டுவிட்டு மற்றவரை மணக்கும் கொடுமைக்கு யார் காரணம்? நானா? இல்லை! பெண்களெல்லாம் பொட்டுப் பூச்சிகளாக, சாக்கடையில் நெளியும் புழுக்களாக மதித்துவிட்ட சில அயோக்கியர்கள்தான் காரணம்!

(15-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டசபைத் தலைவர் தேர்தலில் தங்களுடைய கட்சி தோற்றுப் போய்விட்டது என்பதைத் தெரிந்துகொண்டவுடனே, காங்கிரஸ் மந்திரிகள், ராஜினாமா செய்திருந்தால் அது எவ்வளவோ கண்ணியமாக இருந்திருக்கும். காங்கிரஸ் கட்சிக்கு நல்ல பெயரையும் கொடுத்திருக்கும்.

ஆனால் காங்கிரஸ் மந்திரிகளோ, நம்பிக்கையில்லாத் தீர்மானம், தங்களுடைய பிடரியைப் பிடித்து வெளியே தள்ளத் தொடங்குகின்ற அந்தக் கடைசி விநாடிவரையில், பதவிப் பித்தத்தைக் கைவிட மறுத்துவிட்டிருக்கின்றனர்.

பாடியாலா யூனியனைச் சேர்ந்த காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள், பதவி ஆசை காரணமாக, ஜனநாயகக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணான முறையில், இவ்வளவு விபரீதமான வகையில், காரியமாற்றியிருக்கிறார்கள்.

செய்யலாமா இப்படி?

இவர்களுடைய இத்தனைத் திருக்கூத்துகளையும் மனமார ஒப்புக்கொண்டு, மௌனமாக ஆதரித்து வருகிறாரே பண்டித நேரு, ஆதரிக்கலாமா?

ஜனநாயகத்திற்கு நேர்மாறான இப்படிப்பட்ட செயல்களையெல்லாம் தாராளமாக ஆதரித்துவிட்டு, தன்னை ஒரு ஜனநாயகவாதி என்று கூசாமல் கூறிக்கொள்ளவும் தயாராக இருக்கிறாரே ஜவஹர்லால் நேரு, அது நியாயம்தானா?

அறுபது உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் இருபத்தைந்து உறுப்பினர்களை மட்டுமே காங்கிரஸ்காரர்கள் என்பது தெரிந்திருந்தும், பாடியாலா யூனியனில், காங்கிரஸ் மந்திரி சபையை அமைக்க அனுமதி கொடுத்தாரே நேரு—அது, ஜனநாயகக் கோட்பாட்டிற்கு அவர் இழைத்துள்ள ஒரு துரோகம்.

சட்டசபைத் தலைவர் தேர்தலில் படுதோல்வி அடைந்தது காங்கிரஸ் என்பது தெரிந்த பிறகும் தொடர்ந்து மந்திரிகளாக இருக்கக் காங்கிரஸ்காரர்களுக்கு ஒப்புதல் கொடுத்தாரே ஜவஹர்—அது, ஜனநாயகத்தத்துவத்திற்கு அவர் புரிந்துள்ள மற்றொரு துரோகம்.

"ஜனநாயகக் கோட்பாட்டை இப்படியெல்லாம் நசுக்கிப்பிழிந்து கடுந்தவறு புரிந்துகொண்டே, நானும் ஒரு ஜனநாயகவாதிதான் என்று நித்தநித்தம் பேசுகிறாரே பண்டித நேரு, இந்தச் செயலை என்னவென்று சித்தரிக்கலாம், சேரா? பித்தலாட்டம் என்று சொல்லலாம் இதே தவறை சாதாரண மனிதர்கள் செய்தால்! ஆனால் இப்போது தவறு புரிந்திருப்பவர் மனிதகுல மாணிக்கமாக அல்லவோ இருக்கிறார்! இவருடைய செயலை என்ன பெயரிட்டு அழைப்பது என்றே எனக்குப் புரியவில்லையே! உனக்கு ஏதாவது தோன்றுகிறதா, சேரா?" என்று கேட்டேன் நான்.

"எனக்கும்தான் புரியவில்லை பாண்டியா! ஆனால் வேறொன்று புரிகிறது எனக்கு! பண்டித நேரு தெரியாத்தனமாக மிதக்கவிட்ட காங்கிரஸ் கப்பல்களிலே, ஒன்று, கவிழ்ந்துவிட்டது. ஜல பாடியாலா கடலுள் மூழ்கிவிட்டது." என்றான் சேரன்.

"இன்னமும் இரண்டு கப்பல்கள் மிச்சமிருக்கின்றனவே சேரா?"

"எவை அவை?"

"ஒன்று, ஜல திருவாங்கூர்—கொச்சி! மற்றொன்று ஜல சென்னை!"

"ஆமாம் ஆமாம்! அந்த இரண்டு இராஜ்யங்களிலும்கூட காங்கிரஸ் கட்சி மைனாரிட்டி கட்சியாக இருந்தும் மந்திரிசபை அமைத்திருப்பது உண்மைதான். திருவாங்கூர்—கொச்சி சட்டசபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 108 ஆகவும் காங்கிரஸ் உறுப்பினர் எண்ணிக்கை 44 ஆகவும் இருக்கிறது. சென்னை சட்டசபையிலோ மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 375 ஆகவும், காங்கிரஸ் உறுப்பினர் எண்ணிக்கை 152 ஆகவும் இருக்கிறது."

"இரண்டு இராஜ்யங்களிலும் காங்கிரஸ் மைனாரிட்டியாக இருந்தும், இரண்டு இடங்களிலும் காங்கிரஸ், மந்திரிசபை அமைத்துவிட்டதே சேரா!"

"அமைத்துவிட்டால் என்ன? அவை என்றும் சிரஞ்சீவியாக இருந்துவிடும் என்று அர்த்தமா? பாடியாலா பாதையில் அவையும் போகாமலா இருந்துவிடும்?" என்று பதில் கூறினான் சேரன்.

நியாயம்தானே அவன் கூறுவது? இரண்டும் இரண்டும் நான்கு என்பது உண்மையானால், நான்கும் நான்கும் எட்டு என்பதும் உண்மையாகத்தானே இருக்க வேண்டும்?

---

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

"கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்பன போன்ற நீதிகளை—சமூகச் சட்டங்களை—அந்தக்காலத்தில், தங்கள் சுயநலத்துக்காக உண்டாக்கினார்களே சில "பகல்வேஷ" போடும் பரோபகாரிகள், அவர்கள்தான் காரணம்! ஆண்டவன்தான் இதற்கு காரணமென்றால் அந்த ஆண்டவன் அழியவேண்டியதுதான்!

ஆண் தனக்குப் பிடித்தமான வளை மணந்து கொள்ளலாம், ஆனால் பெண்ணுக்கு அந்த உரிமை கிடையாது! இது நீதியா? மனிதத் தன்மையா? இந்த முறையினால் எத்தனையோ பெண்களின் வாழ்க்கை வறண்ட பாலைபோலாகி விட்டதே! எத்தனையோ பெண்களின் இதயம் இருண்ட குகைபோலாகி விட்டதே! அப் பெண்களின் உள்ளத்திலெழும் உணர்ச்சிகளை எழுத்தோவியமாக்கினால் அது ஒரு சோகத் தொடர்கதையாயிருக்குமே!

அந்த அபலைப் பெண்களின் பட்டியலில் நானும் ஒருத்தி!

தோட்டத்துக் குளத்தைப் பார்த்தேன். தாமரை வாடிக்கிடந்தது! வாடிப்போன அத் தாமரைக்கு நானும் ஒருத்தி துணையாக இருக்கிறேன்! ஆம்; நான்கூட ஒரு தாமரைதான்! ஆனால் என் கணவரோ நிலவு! நிலாவும் தாமரையும் என்றாவது..........?

---


## பேர்வாள்

### சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ. 6—8—0 |
| 6 மாதம் | ரூ. 3—4—0 |

பேர்வாள் அலுவலகம்
131, பிராட்வே, சென்னை-1.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரயில்வேத் தொழிலாளரிடையே கட்சிப் பிரசாரம் நடத்திவந்தாள். இத்தனை தியாகத் தழும்புகளைப் பெற்றபிறகு அவள் லட்சியம் கை கூடியது. நாடு பூஞ்சோலையானது. "ப்ராவ்டா"வின் செயலாளராகவும், அவ்விதழின் பெண்களின் பகுதி ஆசிரியையாகவும் இருந்து ஆற்றல் மிக்க கட்டுரைகளை எழுதி அணங்குகளுக்கு உற்சாகம் தந்து வந்தாள். அதற்குப்பிறகு பல குழுக்களிலும் பொறுப்பு மிகுந்த பதவிகளைப் புகழ்த்தக்க வண்ணம் ஏற்று நடத்திவந்தாள்.

தியாகத் தீயில் குதித்து, திக்கெட்டும் இலட்சிய முரசு கொட்டி, தேன் பாயும் நாடாக ஆக்கப்பாடுபட்ட திரமிக்க பெண்கள் பலர் இருந்தனர் ருஷ்யாவில். இன்றும் இருக்கிறார்கள். பல இன்னல்களை எதிர்த்துப் போரிட்டு, பகைவர்களை முறியடித்து, பாசிசத்தை வீழ்த்தி, தங்கள் நாட்டைப் பார்ப்பவர் பிரமிக்கும்படி மாற்றி அமைத்தார்கள். அதற்காகத் தியாகத் தழும்புகளை ஏற்றுக்கொண்டதேன் மொழியினர் எத்தனை பேர் என்று அறுதியிட்டுரைக்க முடியாது. நாட்டு நலனே தங்கள் நலன் என்று வீறுகொண்டு, சுயநலனை மறந்து, சொகுசான வாழ்வைத் துறந்து சொர்க்கவாசலைக் கண்டார்கள். அந்நாட்டுச் சுந்தரிகள். சிங்காரச் சோலையில் தங்கள் சிந்தைக்கினிய சுந்தரர்களுடன் சிற்றின்பம் பெற வேண்டிய சேயிழையினர், கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப் பாதைகளில், கனத்த துப்பாக்கிகளை ஏந்தி, கயவர்களையும், காட்டாட்சி நடத்தியோரையும் தோற்கடித்து, தூய ஜனநாயகக்குடியரசு தோன்றப் பாடுபட்டார்கள். அவர்கள் இலட்சியம் நிறைவேறியது.

இன்றைய ருஷ்யாவில் பொறியியல் கலைஞராகவும், பொருளாதார வல்லுநர்களாகவும், பூதத்துவக்கலைஞராகவும், மருத்துவர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், எல்லாத் துறைகளிலும் பெண்கள் பெரும் பங்கு கொண்டிருக்கின்றனர். பற்பல துறைகளில் ஆண்களைவிட அதிகமாகவும் பங்கு கொண்டுள்ளனர். உலகத்திலே எந்த நாட்டுப் பெண்களையும்விட அதிகமான அளவு பொறுப்புள்ள பதவிகள் வகித்திருக்கிறார்கள்; வகிக்கிறார்கள்.

ருஷ்யநாட்டுப் பெண்டிர் இன்று உலகிற்கு ஓர் உதாரணமாக விளங்குகிறார்கள். ஆனால் அந்த நிலையை அடைய அவர்கள் சிந்திய ரத்தம் எவ்வளவு! பலியிடப்பட்ட பெண்டிர் எத்தனைபேர்!...

இந்நிலையில் நம் நாட்டுப் பெண்டிரின் வாழ்வை நினைவு கூறுங்கள்! ருஷ்யநாட்டுப் பெண்களைப்போல் நம் பெண்கள் ஆகமுடியாவிட்டாலும், ஆண்களாலாவது அந்நிலையை அடைய முடியுமா? என்றாலும் பூவையர் அந்நாட்டில் இசைத்த புரட்சிகீதம், நமக்கு— புதுவாழ்வு காணத் தோள் தட்டி நிற்கும் நமக்கு— ஒரு புத்துணர்ச்சி தரவேண்டும்.

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். எல். ஏ. பதவியை இழந்தார் சங்கரனார் என்கிற சேதியைக் கேள்விப்பட்ட நாளிலிருந்து பொதுமக்கள் இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

கேட்காமல் இருப்பார்களா? ஆச்சாரியார் வேண்டுமானால் கேட்காமல் இருப்பார்! கேட்காமல் இருப்பது மட்டுமல்ல, தேர்தல் கணக்கைக்கூடக் காட்டத் தவறிய இத் "தேசபக்தரை", சிறந்தவர், சீலம் மிகுந்தவர். மந்திரியாக இருக்கத் தகுந்தவர், திறமையும் தகுதியும் நிறைந்தவர் என்று பஜகோவிந்தம் பாடவும் ஆச்சாரியார் தயாராக இருக்கக்கூடும்.

ஆனால் பொதுமக்கள் எப்படி அதை ஒப்புக் கொள்வார்கள்? அவர்கள் என்ன அவ்வளவு ஏமாளிகளாகவா இருக்கிறார்கள்?

"அறிவின் சிகரம் என்று ஆரிய வட்டாரம் வாணளாவப் புகழ்கிறதே ஆச்சாரியாரை! அவரோ பொறுப்பை மறந்த ஒரு புண்ணியவானைத் தன்னுடைய அரும்பெரும் அமைச்சராக அமர வைத்துக் கொண்டிருக்கிறாரே! இதுவா அறிவின் சிகரத்துக்கு அடையாளம்? யார் யார் சிறந்த அமைச்சர்களாக இருப்பார்கள் என்பதைக் கண்டறிகிற திறமைகூட இல்லையே ஆச்சாரியாருக்கு! "இதனை இதனால், இவன் முடிக்கும் என்று ஆய்ந்து, அதனை, அவன்கண் விடல்" என்கிற திருக்குறளின் உட்பொருள்கூட, இவருக்குத் தெரியக் காணோமே" என்றுதான் பொதுமக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

ஆச்சாரியாரின் ஆட்சித் திறமையையேகூட அவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

எப்படி சந்தேகிக்காமல் இருப்பார்கள் கனம் சங்கரனாரின் சம்பவத்தைக் கண்ட பிறகு?

---


உங்களைத்தான்..........!

சிந்தனைக் குகையிலே தள்ளும்!
சிதைந்த கதையினைச் சொல்லும்!
கண்ணீரைக் காணிக்கையாகக் கேட்கும்!

**வேதனைக்குரல்**

விலை 4 அணா

**(எஸ். பி. நாதன் எழுதியது)**

"......பசிக்கொடுமைக்கு ஆளாகி மானமிழந்து; மனைவியை இழந்து குழந்தையைக்கொன்ற ஒரு சேலம் நெசவாளியின் சோகக்கதை நாட்டு நிலையை விளக்கிக் காட்டி, படிப்போரின் மனதைக் கலக்கி, சிரிக்கவும், பதைக்கவும், சிந்திக்கவும் வைக்கிறார் ஆசிரியர். தேவையான புத்தகம் புரட்சிப் புதையல்......"

"பகுத்தறிவு"

**பகுத்தறிவுப் பாசறை**

131, பிராட்வே
சென்னை-1.



Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers. 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilanchellyan B.A. (Hons.)